குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

25] பராபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—66 [இதழ் 12

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

மாயைமலம் எங்கே
மறைந்ததோ! மாயைதனில்
ஆயசகம் எங்கே
அழிந்ததோ! — காயமதில்
தங்கும் புருடனெங்கோ!
சச்சிதா னந்தவெள்ளம்
எங்கு மிகக்கோத்த
தே. (46)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 | 10-11-66 | இதழ் 12

உட்பொருள்

எண் பக்கம்

1 உமை முருகன் உடனாகிய பெருமான் ... 537
2 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை .. 545
3 சித்தாந்த வினாவிடை ... 553
4 'அமுதிற்குத் தமிழென்று பேர்' ... 558
5 ஆளுடையபிள்ளையார்... 564
6 சிறுபாணாற்றுப்படை அமைப்பும் அழகும் ... 567
7 தையல்நாயகி அந்தாதி 571
8 வேளூர் இலவச சித்த வைத்தியசாலை ... 574
9 அப்பர் அருள் முரசு ... 578
10 செய்திகள் ... 584
11 எதிர்காலம் ... 594
12 Extract from the Visitor's Book 544, 552, 563, 566

அட்டைப்பட விளக்கம்

செந்திற்குமரன் திருவடிகளில் திருத்தருமையாதீன அடியவர் ஸ்ரீ சம்பந்தசரணாலயர் "கந்த புராணச் சுருக்கநூலைச்" சமர்ப்பித்தல்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] பராபவ - ஐப்பசி - 10—11—66 [இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

உமை முருகன் உடனாகிய பெருமான்

இறைவன் வேறொன்றையும் நோக்காது தன்னிலையில் தான் இருக்கும்பொழுது ஒருவனாய், 'சிவம்' என இருப்பன். இந்நிலையில் அவனுக்கு யாதொரு செயலும் இல்லை. அதனால், செயல் செய்தற்கு வேண்டிய உருவம் முதலிய எவையும் இல்லை. ஒன்றும் செய்யாது அமைந்திருத்தலை, 'சிவனே என்று இருத்தல்' என்று கூறும் வழக்கு, இதை ஓரளவில் புலப்படுத்துவதாகும்.

தன்னிலையில் இருக்கும் சிவன், தனக்கு இயல்பாய் உள்ள கருணை காரணமாக உயிர்களை நோக்கி அவற்றின் பொருட்டு ஏதேனும் செய்யத் தொடங்கும்பொழுது, தானும்

தனது சத்தியும் - அஃதாவது சிவமும் சத்தியும் என இரு கூறுகி விளங்குவான். 'ஒருரு வாயினை; மானுங் காரத்து - ஈரியல்பாய்' என்று திருஞானசம்பந்தர் அருளிச்செய்தது, இந்த இருவகை நிலையையுமேயாகும். சிவமும், சத்தியும் என இரண்டாகியபொழுதும், இரண்டும் இரண்டு தனிப் பொருள்கள் அல்ல; ஒருபொருளின் தன்மையே என்பதை விளக்கவே, ஒன்றாய் இருக்கும் நிலையைக் கூறும்பொழுது, 'உருவாயினை' என்றும், இரண்டாய் இருக்கும் நிலையைக் கூறும்பொழுது, 'இயல்பாய்' என்றும் அருளிச்செய்தார்.

ஒருபொருளாய், 'சிவம்' என இருந்த இறைவன், பின்னர், 'சத்தி, சிவம்' என இரண்டு கூறாய் இயைந்து நிற்றலைக் காட்டுவதே, மாதொரு கூறனாகிய அர்த்தநாரீசுவர வடிவம். இனி, இறைவன் ஒருகூறும், இறைவி ஒரு கூறுமாய் ஒன்றாய் இயைந்து நிற்பதன்றி, இருவரும் வேறு வேறாய்க் காட்சியளிக்கும் வடிவமும் உண்டு; அஃது, 'உமாமகேசுர வடிவம்' எனப்படும்.

இறைவன் இங்ஙனம் சத்தியும், சிவமுமாய் இயைந்து நின்றே உலகத்தை நடத்துதலானும், அங்ஙனம் இயைந்து நில்லாதவழி உலகம் நடவாதாகலானும், 'சத்தி, சிவம்' என்னும் இருவருமே உலகிற்கு அம்மையும் அப்பனுமாய் விளங்குகின்றார்கள். இங்கு, 'உலகு' என்பது உயிர்களையே குறிக்கும். ஏனெனில், பிறந்து, வளர்ந்து, அம்மையப்பர் தரும் நன்மை தீமைகளை அடைதற்கு உரியன உயிர்களே யாதலால். எனவே, சத்தி தாயும், சிவம் தந்தையும் என்றால், உயிர்கள் பலவும் அவர்களது மக்களாகின்றன.

'சத்தியும், சிவமும் ஆகிய தாய் தந்தையர், உயிர்களாகிய மக்களைப் பெற்று வளர்க்கின்றார்கள்' என்றால், அதன் பொருள் என்ன? உயிர்களுக்கு அறிவைத் தோற்றுவித்து, அறிவை விரிவடையச் செய்கின்றார்கள் என்பதுதான் பொருள். ஏனெனில், சத்தியும், சிவமும் உடம்பிற்குத் தாய்தந்தையர் அல்லர்; உயிருக்கே தாய்தந்தையர். உடம்பிற்குத் தாய்தந்தையர், உலகில் காணப்படுகின்றனர்

அவர்களிடத்திலும் நாம் தாய்தந்தையர் என்று குறிப்பிடு வது, அவர்களுடைய உடம்பைப் பற்றித்தான் ; உயிரைப் பற்றியன்று. ஏனெனில், அவர்களது உடம்பு நீங்கிய உடன், தாய்தந்தையர்கள் நீங்கினவராகின்றனர். ஆகவே, உடம் பின் வழியே தம் மக்களோடு தொடர்பு கொள்ளும் தாய் தந்தையர், அவ்வுடம்பின்வழியாகவே, அம்மக்களது உடம்பு கட்குத் தாய்தந்தையராயினமை தெளிவு. அதனால் அவர் கள், உடம்பிற்குத் தாய்தந்தையரல்லது, உயிருக்குத் தாய் தந்தையரல்லர்.

சத்தியும், சிவமும் தம்மக்களோடு உடம்பு வழியாகத் தொடர்புகோள்பவர் அல்லர் ; அறிவின்வழியே தொடர்பு கோள்பவர். அதனால், அவர்கள் உயிர்களின் அறிவுக் கறிவாய் நின்று அதனைத் தோற்றுவித்து வளர்ப்பர். அதனால், அவர்கள் உயிருக்குத் தாய்தந்தையராகின்றனர். இன்னும், அறிவுக்கறிவாய் நின்று அறிவை வளர்க்குங்கால் அவ்வறிவிற்குத் துணையாகவே உடம்பையும், பிற போருள் களையும் தோற்றுவித்து நிறுத்துகின்றனர். அதனால், சத்தி யும், சிவமுமே உலகிற்குத் தாய்தந்தையராகின்றனர்.

இறைவன், ‘சத்தியும், சிவமும்’ என இருகூறாய் நின்று உயிர்கட்குத் தாய் தந்தையாய் அவற்றை வளர்த்து வருகின்ற உண்மை நிலையைக் காட்டுவது உமையை மட்டு மன்றி முருகனையும் உடன்கொண்டு விளங்கும் வடிவம். இது, ‘சோமாஸ்கந்த மூர்த்தம்’ எனப்படும். ‘சோமாஸ் கந்தர்’ என்பதற்கு, ‘உமையோடும், ஸ்கந்தரோடும் கூடி யிருப்பவர்’ என்பது போருள், இறைவன் தனது இடப் பாகத்தில் உள்ள இறைவியுடன், இருவருக்கும் நடுவில் குழந்தை முருகனை அமர்த்திச் சோமாஸ்கந்த மூர்த்தியாகி யது, முருகன் திருவவதாரம் செய்தபோழுது என்பதைக் கந்தபுராணம் விரிவாகக் கூறும் ; அதன் சுருக்கம் வருமாறு:

சூரபதுமன் முதலிய அசுரர்கள் செய்யும் இடுக்கணைப் போறுக்கமாட்டாது முறையிட்ட தேவர்களது வேண்டு கோளுக்கு இரங்கிய சிவபெருமான், அவ்வசுரர்களை அழித் தற்போருட்டு முருகப்பெருமானைத் தோற்றுவிக்க நினைந்து,

தாம் ஆறு திருமுகங்களுடன் இருந்து நெற்றிக்கண் ஆறிலும் இருந்து ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்து, அவைகளை வாயுதேவன், அக்கினிதேவன் என்னும் இருவர் பால் ஒப்புவிக்க, அவர்கள் அவற்றின் வெப்பத்தைத் தாங்க மாட்டாது கங்கையில் விடுக்க, கங்கையும் தாங்கமாட்டாது சரவணப்பொய்கையில் சேர்க்க, ஆறு தீப்பொறிகளும் ஒன்ருகி, ஆறுதிருமுகங்களும், பன்னிரண்டு கைகளுமாக முருகப்பெருமான் அவதரித்தருளினுர். அவருக்குக் கார்த்திகைப் பெண்கள் அறுவறும் பால்கொடுக்க விரும்பி வந்த பொழுது, முருகப்பெருமான் ஆறு குழந்தைகளாகி அவர்களிடம் பால் உண்டு விளையாடினுர். பின்பு சிவபெருமான் உமாதேவியுடன் சரவணப் பொய்கையை அடைந்து, அம்மையை, முருகனை எடுத்துவரும்படி கட்டளைஇட, அம்மை சென்று ஆறு குழந்தைகளையும் முன்போலவே ஒன்ருகுமாறு செய்து எடுத்து அணைத்து உச்சிமோந்து இறைவனிடம் கொடுத்தனள். இறைவனும் முருகப்பெருமானை வாங்கி மார்போடணைத்துத் தனது இடப்பக்கத்தில் இறைவிக்கும் தனக்கும் நடுவே இருத்தி மகிழ்ந்தார். இதனைக்கண்ட தேவர்கள் மகிழ்ச்சியுற்றுப் பூமாரி பொழிந்து வாழ்த்தினர்.

இவ்வடிவத்தின் இயல்பையும் அந்நூல் பின்வருமாறு கூறுகின்றது :

*" அருத்தி தந்திடு குமரவேள் ஒருபுடை அமரப்
பெருத்த மன்னுயிர் யாவையும் முன்னரே பெற்ற
ஒருத்தி தன்னையும் கையினுல் ஒய்யென வாங்கி
இருத்தி னுன்தன திடத்தினில் எம்மையாள் இறைவன்."*

*" ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் றனக்கும்
பால னுகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவொடு பகலுக்கு நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா ருெக்கும்."*

இறைவன் உமையொரு பாகனுகி அம்மையப்பனுய்க் காட்சியளிப்பதே, அவன் உலகிற்கெல்லாம் தாய்தந்தையாய் விளங்குகின்ருன் என்பதை விளக்கப் போதுமாயினும், மக

வோடு கூடிநிற் றும் சோமாஸ்கந்த வடிவம் அதனை இன்னும் நன்குணரச் செய்வதாகும். இதுபற்றியே சேக்கிழார், பிள்ளைக்கறி யமைத்துத் தந்த பெருந்தொண்டராகிய சிறுத் தொண்டருக்கு இறைவன் வெளிப்பட்டு நின்ற தோற்றத்தை,

" செய்ய மேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே
ஒளித்த தெங்கே எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய.
மறைந்த அவர்தாம் மலைபயந்த
தையலோடும் சரவணத்துத்
தனயரோடும் தாம்அணைவார்

என, இச்சோமாஸ்கந்த வடிவமாக எடுத்தோதியருளினார்.

இறைவன், தான் அருளுடையவன் என்பதைக்காட்டக் கொண்ட தேவி அவனது சத்தியாதல்போல, தான் அப் பனும், தன் தேவி தாயுமாதலை நன்குணர்த்துதற்பொருட்டுக் கொண்ட மகவாகிய முருகனும் அவனது சத்தியே. இதனை,

" ஆதலின் நமது சத்தி அறுமுகன் ; அவனும் நாமும்
பேதகம் அன்றால் ; நம்போல் பிரிவிலன் யாண்டும்
நின்றான் "

என்பது முதலாகப் பல இடங்களில் விளக்குவார், கச்சி யப்ப சிவாசாரியார். இத்திருவடிவத்தை நினைத்தே திரு நாவுக்கரசர், சிவபெருமானை,

" நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன் "

என்றும்,

" பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும் "

என்றும் அருளுகின்றார்.

இறைவனது சத்தி தேவியாய்த் தோன்றுவதன்றிப் பிறவாறும் தோன்றுமோ எனின், அருள் வடிவங்களாய் உள்ள சாங்க உபாங்கப் பிரத்தியங்கங்கள் ஆகிய யாவும்

சத்தி சொரூபமே எனின், சத்தி தேவியாயன்றிப் பிறவாறும் தோன்றுமோ என ஐயுறுதற்கு ஏதுவில்லை.

" சத்திதான் நாத மாதி
தானாகும் ; சிவமும் அந்தச்
சத்திதா னாதி யாகும் ;
தரும்வடி வான எல்லாம்
சத்தியும் சிவமு மாகும் ;
சத்திதான் சத்தனுக்கோர்
சத்தியாம் ; சத்தன் வேண்டிற்
றெல்லாமாம் சத்தி தானே "

என்ற சிவஞான சித்திச் செய்யுள் இதனைத் தெளிவுற விளக்குகின்றது. 'சிவம்' என்பது யாதொரு செயலுமின்றி யிருப்பது ஆதலின், சிவபெருமானை, 'சத்து' என்றும், இறைவனது சத்தி ஞானமாதலின், தேவியாகிய உமை யம்மையை, 'சித்து' என்றும், சத்து சித்துக்களால் தோன்று வது இன்பமாதலின், மகவாகிய முருகனை, 'ஆனந்தம்', என்றும் ஒருவாறு வரையறுத்துக் கூறுவர். அது, 'மூவரும் பொருளால் ஒன்றே' என்னும் கருத்தினதாம்.

தேவர்கள் பொருட்டுத் தோன்றிய முருகப்பெருமா னோடு கூடிய இச்சோமாஸ்கந்த மூர்த்தியைத் துதித்துத் தேவர் பலரும் துன்பத்தின் நீங்கி இன்பத்தினைப் பெற்றா ராதலின், இத்திருவடிவம் இம்மை மறுமை நலங்களை இனி தருளும் போகவடிவமாம். எனினும், முருகப்பெருமான் ஞானகுருபரனும் ஆதலின், இவ்வடிவம் முடிவில் ஞானம் வாயிலாக வீடு பேற்றையும் தருவதாகும்.

" அடலிற் கொதிக்கும் படையாழி
யண்ணல் முதலோர் ஏத்தெடுப்பத்
தடவுச் சீயப் பிடர்த்தலையிற்
கவினும் மணிப்பூந் தவிசும்பர்க்
கடவுட் பிராட்டி உடங்கிருப்பக்
கதிர்வேற் காளை நள்ளிருப்ப
நடலைப் பிறவி மருந்தாகி
வைகும் நாதன் திருவுருவம் "

என்பது காஞ்சிப் புராணம்.

முருகக்கடவுள் சூரபதுமனுதியரை வென்று தேவர்கட்கு எல்லா இடுக்கண்களையும் களைந்து இன்பத்தைக் கொடுத்த மகாசஷ்டி விழா இதுபொழுது தொடங்குகின்றது. இந்நாட்களில் இத்திருவுருவத்தின் பெருமையை உணர்ந்து வழிபட்டு எல்லா நலங்களையும் எய்துவோமாக.

25 ஆவது ஆண்டு நிறைவு

நமது ‘ ஞானசம்பந்தம் ’ திங்கள் இதழிற்கு 25ஆவது ஆண்டு நிறைவுறுகின்றது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ‘ ஞானசம்பந்தம் ’ இலக்கியம், இலக்கணம், தோத்திரம், சாத்திரம், இசை, நாடகம், மருத்துவம், சோதிடம் முதலிய துறைகளில் தனிக் கட்டுரைகளையும் தொடர் கட்டுரைகளையும் வெளியிட்டுப் பல வகைப் பணிகளைச் செய்து வந்துள்ளதை நேயர்கள் பலரும் நன்கறிவர். நூல்கள் பலவற்றை மூலம் மட்டிலாகவும், உரைகளுடனும் பல இதழ்களில் தொடர்பாக ‘ ஞானசம்பந்தம் ’ வெளியிட்டுள்ளது. அவ்வப்பொழுது இதன் சிறப்பு இதழாக வெளி வந்துள்ள மலர் வெளியீடுகளும் பல.

இத்திங்கள் இதழிற்குத் தங்கள் திருக்கண் நோக்கத்தை அளித்து இதனை நன்கு புரந்து வருபவர்கள், தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்களாவார்கள். இவர்கள் இதன் திங்கள் இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் அரிய பெரிய பொருள்கள் பொதிந்த தங்கள் அருளுரை, ஆசியுரைகளையும் வழங்கி இதனைப் பெருமையுறச் செய்து அருள் பாலித்து வருகின்றார்கள். சைவமும், தமிழும் தழைத்தினிதோங்குவதையே தங்கள் திருவுளக்குறிப்பாகக் கொண்டு, அதற்கு ஆவன பலவற்றையும் செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவடிமலர்கட்கு நன்றியறிவோடு கூடிய எங்கள் பெருவணக்கத்தைச் செலுத்திக்கொள்கின்றோம்.

திங்கள் இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் இலக்கிய இலக்கணம் முதலாக மேற்குறித்த பல துறைகளிலும்

அறிஞர் பலர் தனிக்கட்டுரைகளும், தொடர் கட்டுரைகளும், ஆராய்ச்சிகளும், கவிதைகளும், நூல் உரைகளும் அளித்து வந்துள்ளார்கள். அவர்கள் அனைவர்க்கும் எங்களது என்றும் மறவா நன்றி உரித்து.

'ஞானசம்பந்தம்' தனது நற்பணிகளைச் செய்து வருவது, இதனைத் தாங்களும் பெற்றுப் பிறரையும் பெறச் செய்கின்ற நேயர்களது பேரன்பினாலேயே ஆகும். அவர்கட்கு எங்கள் உளமார்ந்த நன்றியை உவகையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

25 ஆவது ஆண்டு நிறைவு இதழாகிய 'ஞானசம்பந்தம்' என்றும் இளையோனாகிய முருகப்பெருமானது மகா சஷ்டி விழாவில் வெளிவருகின்றது. அதனால், இது மேலும் வளர்ச்சியடைந்து அன்பர் பலர்க்கு அரும்பயன் பலவற்றைத் தரும் என்பது உறுதி. 'ஞானசம்பந்தம்' பெருகி நற்பயனைப் பெரிதும் தரத் திருவருளையும், குருவருளையும் மனமொழி மெய்களால் இறைஞ்சுவதுடன், நேயர்கள் பலரையும் ஞானசம்பந்தத்தை மிகுதியாகப் பெற்றுப் பயனடைய வேண்டுகிறோம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

This is indeed a very well maintained temple in which I had the good fortune to offer worship. My humble tributes to the management and compliments to the temple staff.

(Sd) Karunakara Nair,
23—10—66.
Personal Asst. to the
Collector of Tanjore.

ௐ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

ஞான அஞ்சலி

அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது ? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது ? சமயகோ டிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது ?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது ? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது ? அது
கருத்திற் கிசைந்தது ; அதுவே
கண்டன எலாம் ; மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம்.

— *தாயுமானவர்.*

‘ அஞ்சலி ’ என்பது, கும்பிடு ; இருகைகளையும் ஒன்றாகச் சேர்த்துக் குவித்து வணங்குதல். ‘ தொழுகை ’ என்பதும் இதுவே என்பதை, “ கைகாள் கூப்பித் தொழீர் ” என்ற அப்பர் திருவாக்கினாலும், “ தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ” என்னும் திருக்குறளாலும் நன்கறியலாம். இவ்வஞ்சலி சிவ பெருமானுக்கே செய்யத்தக்கது என்பதைப் பரதசாத்திரமும் குறிப்பிடுகின்றது. தேவர்கள் பலரையும் குறிப்பதற்குரிய

அபிநயங்களைக் கூறுமிடத்து, சிவபெருமானைக் குறிக்கும் அபிநயமாக அஞ்சலியைக் கூறுவதே அக்குறிப்பாகும். இக்குறிப்பு, 'யாவராலும் வணங்கத் தக்கவர் சிவபெருமான் ஒருவரே' என்பதைக் காட்டுகின்றது. அப்பர் பெருமான் இக்கருத்தை அறிவுறுத்துதற்கு, ஒரு திருப்பதிகமே அருளிச்செய்துள்ளார். 'தொழற்பாலதே' என்னுந் திருக்குறுந்தொகைப் பதிகமே அது. இதனால், 'சிவபெருமானால் வணங்கத்தக்கவர் ஒருவரும் இலர்' என்பதும் அமைகின்றது. "சேர்ந்தறியாக் கையானை" என்னும் திருவாசகத்திற்கு, 'பிறரைத் தொழுதறியாத கையை உடையவன்' என்பதே பொருள் எனக் கூறுதலும் உண்டு. இவ்வாறாயினும் எல்லார்க்கும் சிவபிரான் ஒருவரையே தொழ மனம் செல்லுதல் இல்லை. எனினும், 'எவருக்கு வணக்கம் செலுத்தினாலும் அவ்வணக்கம் சிவபிரானையே சென்று அடைகின்றது' என்பது உபநிடதங்களின் முடிபு.

வணக்கம் செலுத்துமிடத்து இருகைகளையும் குவித்தல் எதனைத் தெரிவிக்கின்றது? செய்கைக்கு அறிகுறியாகச் சொல்லப்படுவது கை. செயல் செய்ய இயலாதவர்களை, 'கையால் ஆகாதவர்' என்பது வழக்கம். இரு கைகளையும் ஒன்று சேர்த்துக் குவித்து நிற்றல்,

" என்செய லாவ தியாதொன்றும் இல்லை இனித்தெய்வமே,
உன்செய லேஎன் றுணரப்பெற்றேன் '

என்று சொல்லிச் செயலற்று அடைக்கலம் புகுவதையே காட்டுகின்றது. இன்னும் குவித்த கைகளைத் தலைக்குமேல் பன்னிரண்டங்குல அளவில் உயர்த்தி வணங்குவதும், தரையிலே வீழ்ந்து அடிபணிந்து கிடப்பதும் நம் செயல் சிறிதும் இல்லா திருத்தலையே தெரிவிக்கும்.

" நம்செயல் அற்றிந்த நாம்அற்ற பின்நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற "

என்பது திருவுந்தியார். இங்ஙனம் ஆன்மாக்கள் தம் செயலற்று எல்லாம் அவன் செயலாக உணர்ந்து அடைக்கலம் புகுதற்குரிய இடம் இறைவனேயன்றி, உயிர்களாதல் கூடாதன்றோ? அதனால்தான் வணக்கம் 'இறைவன் ஒருவனுக்கே உரியதாயிற்று',

இறைவனை இங்ஙனம் அஞ்சலி செய்யுமிடத்து முன்னோர்கள் செய்தவாறுபற்றி அங்ஙனமே செய்தல் என்பது பொது முறை. இதனை, 'கிரியை அஞ்சலி' என்று கூறலாம். இவ்வாறன்றி, அவனது இறைமைக் குணங்கள்-கடவுள் தன்மைகள் பலவற்றையும் உணர்ந்து, அவ்வுணர்ச்சியால் விளையும் அன்பு மேலீட்டால் அஞ்சலி செய்தல்தான் உண்மை வணக்கமாகும். இதுவே 'ஞான அஞ்சலி' ஆகும். இந்த ஞான அஞ்சலியில்தான் 'நான்' என்னும் தற்போதம் அகன்று, 'எல்லாம் அவனே' என்னும் சிவபோதம் மேலிட்டுத்தோன்றும். இத்தகைய அஞ்சலி எளிதில் இயல்வதன்று. அப்பர் பெருமானே,

'' ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள் ;
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன் ;
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு,
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே ''

என்று கூறுகின்றார் என்றால், மற்றவர்கள் நிலை என்ன ! இத்தகைய ஞான அஞ்சலியைப் புரிதற்குத் தாயுமானவரது பாடல்கள் நமக்குப் பெரிதும் துணைசெய்கின்றன. இவரது பாடல்களில் இறைவனைத் தத்துவ நெறியில் நோக்கித் துதிக்கும் முறைகளே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. அவை அனைத்திற்கும் முன்னதாக முதற்கண் அவர் இறைவனை வணங்கித் தொடங்கும் பாடலே மேல்தரப்பட்டது. இதில் சிவபரம்பொருளினது சிறந்த இயல்புகள் மிக அழகாகக் கூறப்பட்டிருத்தல், தத்துவ நெறியில் இறைவனை வணங்குபவர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

இறைவன், எங்கும் நிறைந்தவன். 'இறை' என்பதற்கே, 'தங்குதல்' என்பதுதான் பொருள். எப்பொருளிலும், எங்கும் தங்கியிருத்தல் பற்றியே பரம்பொருள், 'இறை' என்று சொல்லப்படுகின்றது. ஆகவே, 'இறைவன் எங்கே இருக்கின்றான்' என்று கேட்டால், என்ன சொல்வது? 'அங்கே - வானுலகத்திலே - பரமண்டலத்திலே இருக்கின்றான் ; இங்கே இல்லை' என்று சொல்லலாமா? அல்லது, 'இங்கே-கயிலை, காசி முதலான தலங்களிலே இருக்கின்றான் ; அங்கே - வானுலகத்திலே இல்லை' என்று சொல்லலாமா? இந்த இரண்டு வகையில் எவ்வகையிலும் சொல்லுதல் கூடாது- அதனைத்தான் 'அங்கு இங்கு எனாதபடி' என்கின்றார் தாயுமானவர்.

'இறைவன் அங்கும், இங்கும், எங்கும் நிறைந்திருக்கின்றான்' என்பதை விளக்க நம் நாட்டில் ஒரு சிறுகதை வழங்குவதை யாவரும் அறிவர். பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, 'கடவுள் எங்கு இருக்கிறார் அவர் இருக்கும் இடத்தைச் சொல்; உனக்கு ஒரு மாம்பழம் தருகிறேன்' என்று சொல்ல, மற்றவன், 'நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்; உனக்கு நான் இரண்டு மாம்பழம் தருகிறேன்' என்றான் என்பதே அக்கதை. அதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? 'கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்' என்பதே.

"எங்குள யாவையும் இவன்வயத்தவாம்;
எங்கணும் இவனொரு வயத்தின் எய்திடான்;
எங்கணும் விழி; முகம்; எங்கும் கால்; கரம்
எங்கணும் திருவுரு இவனுக் கென்பவே"

என்கின்றது காஞ்சிப் புராணம்.

இதனையே, 'எங்கும்பிரகாசமாய்' என்று கூறினார் தாயுமானவர். பிரகாசம் - ஒளி; அஃதாவது அறிவு. இறைவன்போல இல்லாவிடினும், ஓரளவில் எங்கும் நிறைந்த பொருள்கள் சில உண்டு. காற்று எங்கும் நிறைந்திருக்கிறது. 'வளிவழங்கும் மல்லல்மா ஞாலம்' எனக்குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். ஆகாயம் எங்கும் நிறைந்திருக்கிறது. மற்றும் இவைபோல்வன சில. இவை எல்லாம் எங்கும் நிறைந்திருப்பினும், இவற்றிற்கு அறிவு உண்டா? இல்லை. இறைவன் அவ்வாறின்றி அறிவே வடிவமாய் எங்கும் நிறைந்திருக்கின்றான். அதனால், எங்கும் எப்பொழுதும் நிகழ்வன எல்லாவற்றையும் அவன் அறிந்து நிற்கின்றான்; இதனைத்தான் 'பிரகாசம்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் தாயுமானவர். இதனை நாம் உணர்வோமாயின், ஒருபோதும் தவறுசெய்ய நினைக்கமாட்டோம்.

அறிவு உள்ள இடத்தில் இன்பம் உள்ளதாகும். அதனால், அறிவே வடிவமாய் இருக்கும் இறைவன், இன்பமே வடிவமாயும் இலங்குகின்றான் என்பதை, 'ஆனந்த பூர்த்தியாகி' என்ற தொடர் தெரிவிக்கின்றது. பூர்த்தி - நிறைவு. நிறைந்த இன்பமே, இறைவன் எண்குணங்களில் 'திருப்தி' எனப்படுகின்றது. இதனை, 'குறைவிலா நிறைவு' எனக் குறிப்பிடுகின்

ஞர்கள் சமயாசாரியர்கள். குறைவிலா நிறைவை உடையவனாய் இருப்பதால், அவன் எதனையும் விரும்புவதில்லை. விருப்பம் இல்லாமையால், அதற்கு எதிராய வெறுப்பும் அவனுக்கு இல்லை. இதையே, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்கின்றார் திருவள்ளுவர். வேண்டுதல் வேண்டாமை இறைவனுக்கு இயற்கையிலே இல்லையாகையால், அவற்றால் வரும் வினையும் அவனுக்கு இயற்கையிலே இல்லை. இதுபற்றித்தான் இறைவனை 'இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன்' என்றும், வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' என்றும் குறிப்பிடுகின்றார்கள். எனவே, இயல்பாகவே பாசங்களில் - வினையில் அகப்பட்ட உயிர்கள் அவற்றினின்று நீங்க வேண்டுமாயின், இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனைப்பற்றியே நீங்க வேண்டுமன்றி, வேறு வழி இல்லை.

நிறைந்த அறிவையும், நிறைந்த இன்பத்தையும் உடையவனாகிய இறைவன், அவற்றைப் பிறருக்கு வழங்கும் அருளுடையவனாய் இருக்கின்றானோ எனில், 'நிறைந்த அருளை உடையவனாய் இருக்கின்றான்' என்பதைக் குறிப்பிடவே, 'அருளொடு நிறைந்தது' என்றார். இதனையே எண்குணத்துள் பேரருளுடைமை' என்கின்றனர். சிலர் பரம்பொருள் அறிவேயாய் இருத்தலன்றி, அருளும், அதனை உடையதுமாய் இல்லை என்கின்றனர்; ஆகவே 'அருளொடு நிறைந்தது' என்ற இதனால், தாயுமானவரது மதம் அவரது மதமன்று என்பது தெரிகின்றது.

நாம் வாழ்கின்ற இப்பூமி, நமக்கு மேலே சந்திரன், பிற கோள்கள், இப்பூமியினும் பன்மடங்கு பெரியனவாகிய சூரியன், நட்சத்திரக் கூட்டங்கள் முதலிய எல்லாம் ஆகாயமாகிய வெளியையே இடமாகக்கொண்டு. இலங்குகின்றன ஆனால், ஆகாயமும் அதற்கும் மேலே உள்ள பல புவனங்களும் எல்லாம் இறைவனுடைய அருளாற்றலிலேதான் தங்கியிருக்கின்றன. அதனால், அந்த அருள், 'வெளி' எனப்படுகின்றது. அஃது அறிவு வடிவானதால், 'சிதாகாசம்' எனவும் கூறப்படுகின்றது. அருள் வெளியிலே எல்லாப் பொருளும் தங்கியிருத்தல், அவை அவ்வாறு தங்கி நிலைத்திருத்தல் வேண்டும் எனக் கருதும் இறைவனது திருவுளப் பாங்கினாலேயாம். அதனை, 'தன் அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் - தங்கும்படிக்கு இச்சை வைத்து' என்று விளக்குகின்றார்.

புறத்தில் இங்ஙனம் சடப்பொருள்களை நிலைபெறுத்துகின்ற இறைவன், அகத்தில் சித்துப் பொருளாகிய எல்லா உயிர்களிடத்தும் அறிவுக்கறிவாய் நிறைந்து நின்று அவற்றின் அறிவை வளர்த்து வருதலை, 'உயிர்க்குயிராய்த் தழைத்தது' என்றார். இறைவன் இவ்வாறு எங்கும் நிறைந்து உயிர்க்குயிராய் இருப்பினும் உயிர்களின் மன வாக்குக்களைக் கடந்தவன் என்பது, 'மனவாக்கினில் தட்டாமல் நின்றது' என்பதில் சொல்லப்பட்டது.

'இங்குக் கூறிய இவைகளே பரம்பொருளின் உண்மை இயல்பாதலின், இவற்றிற்கு மாறான தன்மைகளையுடைய தெய்வங்களை வணங்கும் சமயங்கள் அவைகளையே பரம்பொருளாகக் கொண்டு செய்யும் சொற்போர்களில் அஃது அமைவதன்று, என்னும் உண்மையையே, 'சமய கோடிகள் எலாம் தம் தெய்வம், எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது' என்று தெரிந்துக்காட்டினார்.

ஒருவற்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிப் பரம்பொருளை அடைய முயலும்பொழுது அதைத் தடுப்பதற்கு ஆறு கோடி மாயா சத்திகள் தோன்றித் தம் மாயைகளை வேறு வேறு தொடங்கிச் செய்யும் செயல்களில், இச்சமயவாதிகளது வாதங்களும் சில என்பதை மாணிக்கவாசகர்,

> " சமய வாதிகள் தம்தம் மதங்களில்
> அமைவ தாக அரற்றி மலைந்தனர் "

என்று அருளிச்செய்தார்.

பரம் பொருளாகிய கடவுள் உண்டென்பவரும், இல்லை என்பவருமாக மக்கள் இருதிறத்தினராய் நிற்பர். அவருள், இல்லை என்பார் இல்லை என்று வாதிடவும் உண்டென்பவர் தாம் தாம் கொண்ட தெய்வத்தையே பரம் பொருள் என்று வாதிடவும் இருக்கின்ற நிலையை நோக்கின் மக்கள் வாழுமிடம் எங்குமே பரம்பொருளைப் பற்றிய பேச்சு உளதாதலை உணரலாம்; இதனையே, 'எங்கணும் பெருவழக்காய்' என்று நயம்படக் காட்டியுள்ளார்.

பரம் பொருளின் இயல்புகள் அனைத்தையும் 'சத்து, சித்து, ஆனந்தம்' என்னும் மூன்றில் அடக்கிக்கூறும் மரபினை' 'யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளது' என்று குறித்தார். 'சத்து' என்பதற்கு, 'என்றும் ஒரே நிலையில் உள்ளது' என்பது பொருள். சித்து - அறிவு' 'இறைவன் அறிவு பேரறிவு' என்பது, 'யாதினும் வல்ல ஒரு சித்தாகி' என்று குறிப்பிடப்படுகின்றது. அவனது இன்பம் பேரின்பம் என்பது, முன்னே, 'ஆனந்த பூர்த்தி' என்று குறிப் பிடப்பட்டமையால், 'இங்கு 'இன்பம்' என்று மாத்திரம் கூறினர்.

உயிர்களின் அறிவு, அறியாமைக்கு உட்படுவதும், பின்பு அதிலிருந்து நீங்குவதுமாய் மாறி மாறி நிற்கும். இறைவனது அறிவு அப்படிப்பட்டது அன்று; அதனால், அவனுக்கு இந்த மாறுதல்கள் இல்லை. அறியாமையை, 'இரவு' என்றும், அது நீங்குவதை, 'பகல்' என்றும் கூறுவர். இரவுக்குப்பின் பகலும், பகலுக்குப்பின் இரவும் மாறி மாறி வருவதுபோல, அறியாமைக் குப்பின் அறிவும். அறிவுக்குப்பின் அறியாமையும் மாறி மாறி வரும் நிலைமை இல்லாதது பரம்பொருள் என்பதையே, 'கங்குல் பகல் அறநின்ற எல்லையுளது' என்னுந் தொடர் குறிக்கின்றது. இங்ஙனம் இங்குக்கூறிய தன்மைகள் அனைத்தையும் உடையதே பரம்பொருள் என்பதை விளக்கத் தாயுமானவர், கடவுட் கொள்கை உடையவர்களை நோக்கி, 'இத்தன்மையை உடையது எது? எது?' என்று தனித்தனியாக வினவி வந்து, முடிவில், 'அதுவே கருத்திற்கு இசைந்தது' என்று கூறி முடித்தார். கருத்து - ஞானிகளது உள்ளம். ஞானிகள் அனைவர்களுக்கும் இத்தகைய இயல்புகளை உடையதே பரம்பொருள் என்பது உடன்பாடு என்று தெரிந்து, அதனையே அஞ்சலி செய்வாம் என்கிறார் தாயுமானவர்.

பரம்பொருளுக்கு அஞ்சலி செலுத்துங்கால் அதன் இயல்பு களை இங்ஙனம் நன்குணர்வதுடன், அஃது எங்கும் நிறைந்திருப்ப தால், காணப்படும் பொருள் அனைத்தையும் அப்பரம்பொருளே யாகவும், அதற்கு அறிவே வடிவாகலின், அதனை ஞான சொரூப மாகவும் கண்டு அஞ்சலி செய்தல் வேண்டும் என்பதை, 'அதுவே கண்டன எலாம்; மோன உருவெளியதாகவும் கருதி அஞ்சலி செய்குவாம்' என்று கூறி அமைகின்றார்.

இறைவனது உண்மை இயல்புகளை இங்ஙனம் நன்குணர்ந்து, அதனை மறவாமல் அந்த உணர்ச்சியுடன் அவனுக்குச் செய்யும் அஞ்சலியே ஞான அஞ்சலியாகும். "ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்" என்று அப்பர் அருளிச்செய்த ஞானத் தொழுகை இதுவே. இத்தகைய ஞான அஞ்சலியைச் செய்வ தற்குத் தத்துவ நூல்கள் சாத்திர வடிவில் துணைபுரிவதுபோல, தோத்திர வடிவில் துணைபுரிவன தாயுமானவர் பாடல்கள். அவற்றை உலகம் நன்குணர்ந்து பயன்கொள்வதாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

திறம்பட நிர்வகிக்கப்பெறும், திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத் தில் இன்று தரிசனம் செய்து மிருத்யுஞ்சய ஹோமம் முதலான வைகள் நடத்துவதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்தருளிய தர்மபுரம் ஆதினத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு எங்களது மனப்பூர்வமான நன்றி.

(Sd.) R. Padmanaban,
Dist. Revenue Officer,
Thanjavoor.

9—10—66.

தஞ்சை ஜில்லாவில் பல நல்ல கோவில்கள் இருந்தபோதி லும், இக்கோவில் நல்ல முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளாலும் இதர பக்தியுடைய சிப்பந்திகளாலும், பக்தர் களுக்கு மேலும் பக்திரசத்தை யூட்டி, பக்தியை வளர்க்க நல்ல சேவை செய்து வருகிறார்கள். இச்சேவை தொடர்ந்து நடைபெற அபிராமி அம்மை அருள்புரிவாராக.

(Sd.) T. Subramanyam,
Dt. Manager,
Food Corporation of India,
Thanjavoor.

9—10—66.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 25, இதழ் 11, பக்கம் 488 இன் தொடர்ச்சி)

பாசவியல்

மாணக்கன்: 'பசு' எனப்படும் உயிர்களின் இயல்பை ஒருவாறு விளக்கமாக உணர்ந்தேன்; பாசத்தின் இயல்பையும் அவ்வாறு அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர்: நல்லது! அங்ஙனமே செய்வோம். 'ஆணவம் கன்மம், மாயை' எனப் பாசங்கள் மூன்று என்பதையும். அவற்றின் இயல்புகளையும் முன்பு ஒருவாறு தொகுத்துக் கூறினோம்; அவற்றுள் மாயை, அனைவராலும் எளிதில் உணரப் படுவது. ஏனெனில், பல்வேறு பிறவிகளாகக் காணப்படும் உடம்புகளும், மற்றும் நிலம், நீர் முதலிய பெரும் பொருள்களும், அவற்றினால் ஆக்கப்படும் சிறு பொருள்களும் ஆகிய உலகத் தொகுதி முழுவதும் மாயையின் காரியங்களே. இதனால் எல்லா மதங்களும், 'மாயை' என்ற பெயரினாலோ, வேறு எந்தப் பெயரினாலோ இதனை ஒப்புக்கொள்கின்றன.

இனி, 'கன்மம்' என்பது இவ்வளவு எளிதாகக் காட்சியில் உணர முடியாததாய், ஆனால், சிறிது நுனித்து நோக்கினால் உணரக்கூடியதாய் இருத்தலின், இதனைச் சில மதங்கள் ஒப்புக் கொள்கின்றன; சில மதங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

இவற்றிற்குமேல் உள்ள 'ஆணவம்' என்பதை உணர்தல் மிகவும் அரிதாய் இருத்தலின், அதனைச் சைவம் தவிர ஏனைய மதங்கள் ஒப்புக்கொள்வதே இல்லை. பருப்பொருள் (தூலப் பொருள்) எளிதில் உணரப்படும்; நுண்பொருள் (சூக்குமப் பொருள்) எளிதில் உணரவாராது. எனவே, மாயை பருப் பொருள்; ஆணவம் சூக்குமப் பொருள்; கன்மம் இரண்டிற்கும் இடைப்பட்ட பொருள்; என்பது விளங்கும்.

ஆணவ மலம்

மாணுக்கன்: சூக்குமப் பொருள் உணரவாராது என்பது உண்மை; முயற்கோடு, ஆகாயத் தாமரை முதலியன போல இல்லாத பொருள்களும் உணரப்படுவதில்லையே! அவைபோல ஆணவம், இல்லாத பொருளாய் இருத்தல் கூடாதோ?

ஆசிரியர்: ஆணவம் இல்லாத பொருளன்று; உள்ள பொருளே என்பது முன்னே கூறப்பட்டது: அதனுல், அதைப் பற்றித் திரும்பக் கூறவேண்டுவதில்லை. மூவகைப் பாசங்களில் ஆணவமே முதலாவது. அறிவுடைய பொருளாகிய உயிரை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பு.

மாணுக்கன்: அறிவுடைய பொருளாகிய உயிருக்கு அறியாமை உடையதாய் இருப்பதும் இயற்கைதான் என்று கொண்டால் என்ன?

ஆசிரியர்: 'மாறுபட்ட இருதன்மைகள் ஒருபொருளில் இருத்தல் இயலாது' என்பதைப் பலமுறை உனக்குக் கூறி வந்துள்ளோம். அதனுல், மாறுபட்ட இருதன்மை ஒருபொருளில் காணப்படுமாயின் அவற்றுள் ஒன்று இயற்கையும், மற்ருென்று செயற்கையுமாய் இருக்கும்.

எடுத்துக்காட்டாக நீர் ஓரிடத்தில் அல்லது ஒருகாலத்தில் தட்பமுடையதாயும், மற்ருேரிடத்தில் அல்லது மற்ருெரு காலத்தில் வெப்பமுடையதாயும் காணப்படுமாயின். 'தட்பம், வெப்பம்' என்ற இரண்டனுள் ஒன்றை இயற்கை என்றும், மற்ருென்றைச் செயற்கை என்றும் துணிதல் வேண்டும். ஏனெனில், தட்பமும், வெப்பமும் ஒன்றுக்கொன்று மறுதலையானவை. நீருக்குத் தட்பம் இயற்கையும், வெப்பம் தீயின் சேர்க்கையாலாகிய செயற்கையுமாதல் யாவரும் அறிந்தது. அதுபோலவே, உயிரின்கண் ஓரிடத்து அல்லது ஒருகாலத்தில் அறிவும், மற்ருேரிடத்தில் அல்லது மற்ருெருகாலத்தில் அறியாமையும் காணப்படுமாயின், அவற்றுள் ஒன்று இயற்கை என்றும் மற்ருென்று செயற்கை என்றும் துணிதல் வேண்டும். ஏனெனில், அறிவும், அறியாமையும் ஒன்றுக்கொன்று மறுதலைப் பொருள். உடம்பிற்கு அறிவு இயற்கையன்று; உயிரின் சேர்க்கையாலாகிய செயற்கையே என்பது முன்னே விளக்கப்பட்டமையால், அறிவே உயிரின் இயற்கை என்பதும் அறியாமை அதற்கு ஆணவ மலத்தின் சேர்க்கையாலாகிய செயற்கையே என்றும் துணிதல்

வேண்டும். இதனல். அறியாமையை உயிரின் இயற்கை என்றல் கூடாமையைத் தெரிந்துகொள்.

மாணுக்கன்; அறியாமையை உயிருக்குச் செயற்கை என்றே கொண்டாலும், உடம்பு அறிவில்லாததுதானே? அதனது சேர்க்கையால் உயிருக்கு அறியாமை உண்டாகின்றது என்ருல் என்ன?

ஆசிரியர்: ஆணவத்தை ஒப்புக்கொள்ளாத மதங்கள் அப்படித்தான் சொல்லுகின்றன. ஆனல். அஃது அனுபவத்திற்கு ஒவ்வாதது. எவ்வாறெனில் உடம்பு சோர்வுற்றுக் கிடக்கின்ற உறக்கத்திலும், அது கெட்டொழிகின்ற இறப்பிலும் உயிருக்கு அறிவு நிகழாமையும், உடம்பு வலிமையுற்று விளங்குகின்ற விழிப்பிலும், வாழ்விலும் உயிருக்கு அறிவு நிகழ்தலும் யாவரும், என்றும் அனுபவமாய் அறிவன. ஆகவே, 'உடம்பின் சேர்க்கையால் உயிருக்கு அறிவு மறைக்கப்பட்டு, அறியாமை மேலிடுகின்றது' என்பது பொருந்தாக் கூற்ருகும்.

மாணுக்கன்: உடம்பினல் உயிருக்கு அறியாமை உண்டாக வில்லை என்ருலும், அந்த உடம்பிற்குக் காரணமான கன்மத்தினல் - வினையால் உயிருக்கு அறிவுகெட்டு அறியாமை தோன்றுகின்றது என்றல் கூடாதோ?

ஆசிரியர், அதுவும் கூடாது. ஏனெனில், கன்மம் அல்லது வினை என்பது யாது? செய்கைதானே?

மாணுக்கன்; ஆம்! கன்மம் என்பது நல்லதும், தீயதுமாகிய செய்கைதான்.

ஆசிரியர்: செய்கை நிகழும்பொழுது அறிவு இருந்து நிகழுமா? அறிவு இல்லாமல் நிகழுமா?

மாணுக்கன்: அறிவு இருந்தால்தான் செயல் நிகழும்; ஆனல், இங்கு நாம், 'கன்மம்' என்று கூறுவது செய்யும் செய்கையால் விளைகின்ற புண்ணிய பாவங்களையன்றிச் செய்கைகளை அல்லவே. அதனல், அந்தப் புண்ணிய பாவங்கள் அறிவை மறைக்கின்றன என்றல் பொருத்தந்தானே? "பேதைப் படுக்கும் இழவூழ்" என்று திருக்குறளும் கூறுகின்றதன்ருே?

ஆசிரியர்: "பேதைப்படுக்கும் இழவூழ்" என்று மட்டும் திருக்குறள் சொல்லவில்லை: "அறிவகற்றும் - ஆகலூழ் உற்றக் கடை" என்றுந்தான் சொல்லுகிறது. அதனல். கன்மம் அறிவை உண்டாக்கும் என்பதும் பெறப்படுகின்றதன்ருே!

அதனல், "பேதைப் படுக்கும் இழவூழ்" என்பதற்கு 'வினை அறிவை அழித்துவிடும்' என்பது பொருளன்று' என்பதும், 'அறிவைக் கேடு தேடிக்கொள்ளும் வகையில் செலுத்தும்' என்பதே அதற்குப் பொருள் என்பதும் விளங்கும். விளங்கவே, கன்மம் அல்லது வினை, தன்னைச் செய்தவனுக்கு நன்மை விளையும் முறையிலோ தீமை விளையும் முறையிலோ அறிவைத் தூண்டி விடுமேயல்லது அதனைத் தடுத்து அறியாமையை உண்டாக்காது என்பது புலனாகும். வினை தன்பயனைக் கொடுப்பது, இங்ஙனம் ஏதாவது ஒரு வகையில் அறிவைத் தூண்டி அதன் வழியே ஏதேனும் ஒரு செயலில் ஈடுபடச் செய்து தானேயன்றி அறிவைத் தடுத்து, அது வழியாகச் செயலையும் தடுத்து அல்ல; ஆதலின், கன்மத்தை, அறிவைத் தடைசெய்து அறியாமையை உண்டாக்கும் பொருளாகக் கூறுதலும் பொருந்தாக் கூற்றேயாம், ஆகவே, உடம்பு முதலியனவாய் உள்ள மாயை, நன்மை தீமைகளாய் விளையும் கன்மம் என்ற இந்த இரண்டிற்கும் வேறாய், உயிரின் அறிவைத் தடைசெய்யும் பொருள் ஒன்று இருத்தல் இன்றியமையாததாகின்றது; அந்தப் பொருளே, 'ஆணவமலம்' எனப்படுகின்றது. ஆதலின், 'ஆணவமலம்' என்பது, முயற்கோடு முதலியனபோல இல்பொருளாகாது, உள்பொருளே எனத் தெளிவாயாக.

மாணாக்கன் : இருளாவது, ஒளியினது இன்மையே ஆதல்போல, அறிவினது இன்மையே அறியாமையாதலின், அவ்வின்மையைத் தனித்ததொரு பொருளாகக் கூறுதல் பொருந்துமோ ?

ஆசிரியர் ; ஒளியினது இன்மையே இருளன்று; ஏனெனில் செவி முதலிய பிற பொறிகட்கு, ஓசை முதலிய புலன்கள் கிடையாத பொழுது அவற்றது இன்மை மட்டுமே உணரப்படுதலல்லது, பிறிதொரு பொருள் உளதாக உணரப்படுதல் இல்லை. கண்ணாகிய பொறிக்கு ஒளியாகிய புலன் கிடையாத பொழுது அவ்வாறு ஒளியினது இன்மைமட்டுமன்றி, இருளினது உண்மையும் உடன் உணரப்படுதல் அனுபவமானது. ஆகவே, இருள் ஒளியினது இன்மைக்கு வேறானதே.

> "விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன்
> முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (திருக்குறள்)

> "விளக்குப் புகஇருள் மாய்ந்தாங் கொருவன்
> தவத்தின்முன் நில்லாதாம் பாவம்" (நாலடி)

என்றாற் போல்வன வற்றிலும் இருள் தனித்ததொரு பொருளாகவே கூறப்படுதல் காணலாம். அளவை நூலில் வல்ல பரிமேலழகரும்,

"குடியென்னும் குன்று விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்"

என்னும் திருக்குறளில், "மாசு" என்றதற்கு 'இருள்' எனப் பொருள் உரைத்தமையின், இருள் தனித்ததொரு பொருள் என்பதே அவரது கருத்தாதல் வேண்டும்; ஆயினும்;

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் திருக்குறளின் உரையில், 'இன்னதென ஒருவராலும் கூறப்படாமையின், அவிச்சையை இருளென்றார்' என்று, இருளை இன்னதெனச் சொல்லவொண்ணாத பொருளாகக் கூறினார். ஆயினும், அவ்விடத்தும் அவர் இருளை, 'ஒளியினது இன்மை' எனவரையறுத்துக் கூறினாரில்லை. அஃது எவ்வாறாயினும், மேற்காட்டிய பிரமாணங்களால், 'இருள் ஒளியினது இன்மை யன்று; வேறு தனிப்பொருளே' என்பது பெறப்படுகின்றது.

அது நிற்க, ஒளியினது இன்மையே இருள் என்று கொள்வார்க்கும், அவ்வின்மையின் வேறாய்ப் பிறிதொரு பொருளாக கொள்ளுதல் இன்றியமையாததாகும். ஏனெனில், உளதாய ஒளி இலதாய்ப் போதற்குக் காரணம் கூறல் வேண்டுமாகலின். ஒளியும், அதனைப் பெறுகின்ற கண்ணும் ஆகிய இவற்றது இடைநிற்கும் பிறிதொரு பொருள் யாதேனும் இருந்தாலன்றி, உளதாய ஒளி இலதாதற்குக் காரணம் இல்லை. ஆகவே, அங்ஙனம் இடைநிற்கும் பொருளே ஒளியின்மைக்குக் காரணமாதலின், அதுவே இருளைச் செய்வதாகின்றது. இருளைச் செய்யும் பொருளையே, ஒற்றுமைவழக்கால், 'இருள்' எனக் கூறலும் அமையுமாதலின், ஒளியினது இன்மையே இருள் என்பார், 'இருள் கண்ணை மறைக்கின்றது' என்புழி, 'இருள் எனப்படுவது, இருளைச் செய்யும் பொருள்' எனக் கொள்ளற்பாலர். இருளைப் பற்றிக் கூறிய இவ் விளக்கத்தாலே, அறிவினது இன்மையே அறியாமை என்பார்க்கும், உளதாய அறிவினை இலதாக்குதற்குப் பிறிதொருபொருள் வேண்டும் என்பது பெறப்படுதலின், அவர் உயிர்களின் அறிவைத் தடுத்து அறியாமையைச் செய்கின்ற ஒருபொருளே, அறியாமை, பேதைமை, அவிச்சை முதலிய பெயர்களால் வழங்கப்படுகின்றது எனக் கொள்ளற்பாலராவர். ஆகவே, உயிர்களின் அறிவைத் தடுத்து நின்று அவற்றிற்கு அறியாமையைச் செய்கின்ற ஆணவமலம் உள்பொருளே என்பதை ஐயமின்றித் துணிவாயாக.

(தொடரும்)

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 25, இதழ் 11, பக்கம் 497 இன் தொடர்ச்சி)

எட்டுத் தொகையுள் அடுத்த இடம் நல்ல குறுந்தொகைக்கு. குறிய அடிகள் கொண்ட பாவின் தொகை - குறுந்தொகை எனப் படுகிறது. இந்தக் கருத்தை ஒட்டியே, அகநானூறு என்ற இலக்கியங்கூட 'நெடுந் தொகை' (நெடிய அடிகளாலான பாட லின் தொகை) எனப் பெயர் பெறும் பெற்றியை எண்ணுதல் நன்று.

" சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னுடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம் "

என்பார் நன்னூலாசிரியர். சிறிய கண்ணுடி பேருருவங்களையும் அடக்கிக் காட்டுதல் போல சில எழுத்துக்களால் ஆன சூத்திரங் களும் பல பெரிய உண்மைச் செய்திகளை விளக்குவதாக இருத் தல் வேண்டும் என்பது நன்னூல் நூற்பாவின் பொருள்,

வள்ளுவர்பிரானின் குறளமுதங்கள் இவ்விதிக்கு உட்பட்டே எழுந்தொளிர்கின்றன என்பதைக் கபிலர் வாழ்த்தும் பாவால் தெரிந்துகொள்கிறோம்.

" தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனுர்
வெள்ளைக் குறட்பா விரி. "

இனி, குறுந்தொகை என்ற இவ்விலக்கியமும் (சிறிய கண்ணுடி பெரிய உருவத்தை அடக்கிக் காட்டுமாப் போல) சிறிய பாடல் களைக் கொண்டு மிகப் பெரிய செய்திகளை விளக்கும் பான்மை யைப் பார்க்கலாம்,

குன்றத்துத் தேன்அன்ன குறுங்தொகை :-

பாரதம் பாடிய பெருந்தேவனுரின் கடவுள் வாழ்த்தோடு துவங்கும் இந்நூலில் நானூறு பாடல்கள் உண்டு. நான்கடிச்

சிறுமையும் எட்டடிப் பெருமையுங் கொண்ட இந்நூலினைத் தொகுத்தவர் பூரிக்கோ. பாவின் நடையாலும், அற்புதமான உவமைகளாலும், வரலாற்றுக் குறிப்புகளினுலும் எழில் பெற்று விளங்கும் இந்நூலைச் சிந்தனைச் சுரங்கம் என்று கூறுவதில் மிகையில்லை.

முதல் பாடலாக - கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல் ;-

" தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றல் உலகே. "

செந்தாமரை மலரையொத்த சிவந்த திருவடிகள் மங்கலமான திருஉறையும் மலரானதால் 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்ற சிறப்புப் பெற்றது. மணிவாசகரும் 'திருவளர் தாமரை' என்றார். திருமேனியின் நிறமோ பவழத்தை ஒத்தது என்றார். அதனால்தான் முருகன் செவ்வேள் என்று அழைக்கப் பெற்றான். சிவந்த மேனிக்கிணையாக குன்றிமணியைப் போன்ற சிவந்த ஆடை. கையிலே அஞ்சுடர் வேல். அதுவோ குன்றத்தின் நெஞ்சத்தைப் பிளந்த பெருமை பெற்றது.

" குருகு பெயரிய குன்றெறிந் தானும்
உருகெழு காந்தள் மலைந்தான் "

என்று ஐயனாரிதனர் இந்நிகழ்ச்சியைப் பாடுவார். கடல் நடுவே கிரௌஞ்சமலையாக நின்ற சூரனைத் தனது வேலினாலே வேலன் வதைத்த கதை இது. 'கிரௌஞ்சம்' - என்றொரு பறவை உண்டு. ஆகவே அப்பறவையின் பெயரால் அமைந்த மலை என்பார் 'குருகு பெயர்க் குன்றம் கொன்றான்' என்று (இளங்கோவும்) கூறுவார். சேவற் கொடி கொண்ட குமரன் காப்பதாலே உலகம் இன்பமான, பாதுகாப்பான நாட்களைப் பெறுகின்றது என்று பாடல் நிறைவுறுகிறது. இப்பாடலுள் நான்கு திணை வளமும் இணைந்த பாங்கு நம்மை வியப்படையச் செய்யும். தாமரை, பவழம், குன்றி, செவ்வேள் என்று முறையே மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி நிலங்களின் கருப் பொருள்களை இணைத்துள்ளார் ஆசிரியர்.

நற்றாள், மாணடி என்று வள்ளுவர் குறித்த ஈசனின் தாள்களைக் குறுந்தொகையில் காமர் சேவடிகளாகக் காண்கிறோம். இனி நூலினுள் நுழையலாம் வாருங்கள்.

பரம்பொருள் பாவலன் ஆனான் :-

எல்லாம்வல்ல ஆலவாய் அழகன் 'நன்பாட்டுப் புலவனாகச்' சங்கம் ஏறிய போது பாடிய பாடலாக அமைந்த 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடலைத் தன்னகத்தே கொண்டுள்ளது இந் நூல். காமம் செப்பாதே! நீயறியும் பூவில்.........தும்பியே! எழுமையும் என்னொடு பயின்ற நட்பையும் மயிலின் இயலையும் செறிந்த எயிற்றையுங் கொண்ட இவ்வரிவை கூந்தலினும் நறிய பூவுண்டோ என்று பாண்டியனின் எண்ணப் பிரதிபலிப்பாகப் பரம் பொருளான சிவபெருமானே இதனைப் பாடினார் என்பர்.

இனி தோழி ஒருத்தி அன்பின் பகுதிபற்றிக் கூறும் விளக்கம் நம் உள்ளத்தில் பதியும் அழகைக் கவனிப்போம். மிளைக்கந்தனாரின் எழுத்தோவியம் இதோ :-

"வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே"

களவுக் காலத்தே 'வேம்பின் காய் வெல்லமென இனித்த நிகழ்ச்சியும்' கற்புக் காலத்தே பாரியின் பறம்பிலுள்ள சுனையின் தண்ணிய நீரைத் தலைவி கொடுக்கும்போது அதனை வெய்ய என்றும் உவர்க்கும் என்றும் கூறிய உமது அன்புதான் மாறியது எப்படி ஐயா! என வினவுவாள்.

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போல"

— சிறைக்குடி ஆந்தையார்.

வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூர்தலைத் தவிர தோழிக்கு வேறு வழி தெரியவில்லை.

இனி, தலைவியின் அன்புள்ளத்தை விளக்கும் பாடல்களும் உண்டு. தலைவனிடம் தான் கொண்ட நட்பு நிலத்தைக் காட்டிலும் பெரிது. வானைவிட உயர்ந்தது. கடலையும்விட ஆழமு

டைத்து என்று பாராட்டும் தலைவியையும் இங்கே சந்திக்கிறோம். வினை ஆடவரின் உயிராக இருந்தால், அவ்வினை செய்யும் ஆடவரே மகளிரின் உயிராவார் என்பதனை,

" வினையே ஆடவர்க்கு குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிர் "

என பாலை பாடிய பெருங்கடுங்கோ எடுத்துரைக்கும் இடங்களும் உண்டு.

" பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தந்நோய்க்குத் தானே மருந்து "

என்று வள்ளுவர் ஆண்பால் கூற்றாகக் கூறியதனைக் குறுந்தொகையில் அள்ளூர் நன்முல்லையார்,

" அரும்பிணி அச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே "

என்று பெண்பால் கூற்றில் வைத்துப் பேசியுள்ளார்.

தலைவன் ஒருவன் தலைவிபால் தான் கொண்ட அன்பைப் பாங்கனிடத்தில் எடுத்துச் சொல்கிறான். நின் பெருமைக்கு இது தகாது என்று பாங்கன் அறிவுறுத்தியபோது,

" ....
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே "
— வெள்ளி வீதியார்.

என்று அவலிக்கிறான். சூரியன் நன்றாகக் காய்கின்றதனால் வெம்மைப்பட்ட பாறையிலே வெண்ணெய்த்திரள் வைக்கப்பட்டிருக்கிறது. அதனைக் கையில்லாத ஊமை ஒருவன் கண்ணாலே காவல் செய்கிறான். உருகுகின்ற வெண்ணெயை அவனால் காக்க முடியாதவாறுபோல - என்னாலும் இந்நோயைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று அற்புதமான உவமைமூலம் தெரிவிப்பதை நாம் செவிகொடுத்துக் கேட்கத்தானே வேண்டும்!

இனி, சில முக்கிய செய்திகளை கவனிப்போம் :- பாம்பு யானையை வருத்தும் என்பதனை, 'சத்திநாதனார்' என்பவர்,

" சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு"

என்று தெரிவிப்பார். மக்களை வருத்தும் இயல்புடைய கொல்லிப் பாவையைப் பேரெழிலோடு உவமிக்கும் முகத்தான் 'பரணர்'.

" பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியல் பாவை யன்னஇம்" மெல்லியல்

என்று கூறுவார்.

குறுந்தொகையுள் காணப்படும் சில இயற்கை விவரங்கள் :- ஆமையின் பார்ப்பு தாயின் முகம் நோக்கியே வளரும் (152) குறும்பூழ் பறவையின் சிவந்த கால் போன்று தாளையுடைய உழுந்தின் காய்கள் (68) துன்பத்தால் வெளிப்படும் கண்ணீர் சுடும் (4) பாலைநிலத்தில் கள்வர் தம் அம்பினைச் செம்மை செய்ய நகத்தாலே அம்பின் நுனியைப் புரட்டும்போது எழும் ஒலி போல பல்லி தன் துணையை அழைக்கும் (16) ஆம்பற்பூவின் வாடலை ஒத்த குவிந்த சிறகுகளைக் கொண்ட குருவி (46) என்று இப்படி உணர்த்தப்படுகின்றன.

மறக்கமுடியாத சில உவமைகள் :-

பரத்தை ஒருத்தி தலைவனை இழித்துப் பேசும்போது — ஆடியின் பாவைபோல தன் தலைவி விரும்பியவாறே ஒழுகுகின்றான் என்பாள்.

" கையுங் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே (8)

தலைவியொருத்தி தனது அழகும் இளமையும் தனக்கும் பயனில்லாமல் தலைவனுக்கும் உதவாமல் வீணாகக் கழிகிறதே என்கிறாள்.

" கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது"

எனது மாமைக் கவினைப் பசலை உண்கிறது என்று ஏங்கிப் பேசுகிறாள் (27)

வரலாற்றுச் செய்திகள் சில :-

பெண் கொலை புரிந்து பழிதேடிக்கொண்ட நன்னனைப் பரணர் பாடுகிறார். தன் நாட்டுக் காவல் மிகுந்த மாமரம் ஒன்றின் கனியைக் கோசர்குடிப் பெண் உண்டுவிட்டாள் என்பதற்காக அவளையே கொலை செய்து விட்டான் நன்னன.

இதனையறிந்த கோசர்கள் அகுதையின் தந்தையிடமிருந்து பெற்றுவந்த யானைகளை நன்னன் ஊரில் இல்லா சமயத்தில் அம்மரத்தில் கட்டச்சொன்னார்கள். யானைகள் மரத்தின் அடியிலிருந்த மண்ணை அகற்றியகற்றி விளையாட, மரம் வேரொடு பெயர்ந்து விழுந்தது. இப்படியாகக் கோசர்கள் ஒன்றுபட்ட சூழ்வினைத் திறம் கொண்டவர்களாக விளங்கினார்கள். இதனை,

" மகிழ்நன் மார்பே வெய்யை யானி
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே" (73)

எவ்வி என்ற புரவலனை இழந்த பாணர் முதலியோர் பூச்சூடுதலை வெறுத்து வறுந்தலையினராக இருந்தார் என்பதனை 'எவ்வி இழந்த வறுமை யாழ்ப்பாணர், பூவில் வறுந்தலை போல' (19) என்று உவமையாக இச் செய்தி சொல்லப்படுகிறது.

இப்படியான அருமையான செய்திகளையும் காட்சிகளையும் கொண்ட உயர்ந்த இலக்கியம் குறுந்தொகை.

(விரியும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

இங்கு வந்து இக்கோவிலில் நல்ல முறையில் தரிசிக்க முடிந்தது எங்கள் பாக்கியமே. நிர்வாகிகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி, பாராட்டும் கூட. மனம் ஒன்றுபட்டுத்தரிசிக்க நல்வாய்ப்பும் கிடைத்தது. எல்லாம் அவன் அருள்.

(Sd.) நஞ்சப்பன்,
சப்ஜட்ஜ், திருச்சி.

17—10—66.

ஆளுடைய பிள்ளையார்

வித்துவான். நடேசநாராயணன்

(மலர் 25, இதழ் 11, பக்கம் 514ன் தொடர்ச்சி)

சுற்றியுள சன்னல்களைத் திறந்தே விட்டால்
சுடர்கின்ற விளக்கதுவும் அணைதல் போலே
பற்றியுள புலன்களுக்கே சலுகை தந்தால்
பக்தியெனும் விளக்கதுவும் அணையுந் தானே!
கற்கண்டை உள்ளடக்கி வைத்திருப்பின்
கசப்புணரா வாய்போலே, தேவாரத்தை
முற்கொண்டு நெஞ்சினிக்க நினைத்திருந்தால்
முறையற்ற துயருணரா(து) இருப்பர் கண்டீர் 20

'இறைவனை வணங்காமல் ஐம்பொறிகள் தம்மை
இழுத்தடக்கின் நற்கதியை அடைந்திடலாம்' என்றே
குறையுடைய அமணர்கள்தாம் செப்பிடுவார், அந்தக்
கொள்கைபொருந் தாதென்றே சம்பந்தர், "பாசம்
நிறைகின்ற உயிர்களெலாம் சார்ந்தவற்றின் வண்ணம்
நிற்பதனால் கடவுளது பற்றுக்கோ டின்றி
பிறவியறும் வீடடையா அதனாலே உயிர்கள்
பெருமானைத் துதித்திடலே பயனாகும்" என்றார் 21

"போக மார்த்த" நற் பாடல் மேவிய
பொய்யி லாதநல் ஏடதை
ஏக மானதீ எரியில் இட்டும் சீர்
எழிலொ டுற்றதாம் மற்றும் நல்
வேகமான நீர் தன்னில் மேவிய
"வாழ்க அந்தணர்" ஏடு தான்
சோக மோடமண் தோல்வி கண்டிடச்
சோர்விலா தெதிர் சென்றதே 22

தோற்ற புத்தர்கள் சைவம் சார்ந்திடத்
தோல்வி கண்டதீச் சமணரோ
ஏற்ற அவ்வழி ஏற்க அஞ்சினர்
இறத்தல் நன்றென எண்ணினர்

தேற்ற மோட்வர் கழுவி லேறிடத்
தாங்க ளாகவே செப்பினர்
சீற்ற மோடவர் அடியார் தங்கிய
திரும டத்தினைத் தீய்த்திட 23

கூற்ற மேயெனத் தீமை செய்தமை
கொடுமை யாமென எண்ணியே
'ஏற்ற தண்டனை இவர்க்குச் சாலு'மென்(று)
இடைமறித் திடார் சண்பையர்
மாற்ற மாமிதைச் சேக்கி ழாரவர்
மறைவி லாமலே செப்பினர்
ஊற்ற மாயிதை எண்ணி டாமலே
ஊனம் ஏற்றுதல் நீதியோ ? 24

புனிதவதி காரைக்கால் தலையாலே சென்ற
புகழ்திருவா லங்காட்டை மிதித்தற்கே அஞ்சி
மனதாலே தொழுதிடுவார் ; திருச்செய்ஞ லூரில்
வதிசண்டே சுரர்எண்ணிப் பக்தியொடு நன்றே
தனமாகும் சிவிகையினின்(று) இழிந்து பணிந்தாரே !
தகவான இச்செயலால் அடியாரை நாளும்
மனதாலும் செயலாலும் போற்றுகிற பெற்றி
மாத்தமிழர் சம்பந்தர்க்கு இருந்ததனைக் காண்பீர் 25

தான்படைத்த திலோத்தமையை நான்முகத்தாற் கண்டு
தரங்கெட்டான் அயன்முதியோன் ; சண்பையர்கோன்
ஊன்கழிஎன்பு உயிருடைய பூம்பாவை யாக்கி [தானும்
உயர்அருளின் வெள்ளமெனக் கண்டனரே யன்றித்
தான்மணக்க நினைத்திலரே தருபதினு ருண்டில் ;
தன்மகளென் றுரைசெய்தார்; தன்மையிதை எண்ணின்
பான்மணக்கப் பாமணக்கும் வாயுடையார்க்(கு) ஈடு
பாருலகில் இலையென்றே சாற்றிடலாம் நன்றே 26

கூந்தலிலே பூச்சூடல் சுமையாகும் என்றே
கூறுகிற பெண்ணுண்டோ ? காட்டினிலே மேவும்
மாந்தளிர்போற் றேகையினைச் சுமையாகும் என்றே
மறுக்கின்ற மயிலுண்டோ ? வயிற்றினிலே சேயை
ஏந்தலிலே சுமையுண்டென்(று) உரைக்கின்ற தாய்தான்
இவ்வுலகில் இருப்பதுண்டோ ? இயம்பிடுவீர் மக்காள்
வேந்தனெனும் இறையவனை நெஞ்சினிலே வைத்து
வேளைதொறும் தொழுதிடலும் சுமையென்பார்
[உண்டோ 27

குடியில்லா வீட்டினிலே பூரானும் பாம்பும்
கொடுக்கினிலே நஞ்சுள்ள கொடுந்தேளும் கூடிக்
குடியிருக்கும் நிலையேபோல் நெஞ்சமெனும் வீட்டில்
குறையில்லா ஆண்டவனும் குடியில்லை என்றல்
குடிகெடுக்கும் அழுக்காறு சினங்காமம் எல்லாம்
கூடிவந்தே வாழ்க்கையினைத் தேய்த்திடுமாம் என்றும்
முடிவில்லா நலம்பயக்கும் திருமுறைகள் தம்மை
முனைந்தோதின் நெஞ்சமதில் கடவுளென்றும் வாழ்வார்

அன்பூட்டும் அருளூட்டும் அறந்தானும் ஊட்டும்
அகந்தூய்மை பெற்றிடவே பண்பனைத்தும் ஊட்டும்
தென்பூட்டும் திறமூட்டும் தீரமதும் ஊட்டும்
தெளியாத மனத்திற்கும் தெருளூட்டும் கண்டீர்
துன்பூட்டும் பிறவியெனுந் துயர்க்கடலைத் தாண்டும்
தோணியையும் ஊட்டும் உடன் தோற்றமுறும் வீடாம்
இன்பூட்டும் அனைத்தையுமே இசைந்தூட்டும் என்றும்
இயல்ஞான சம்பந்தத் தமிழ் ஓதுவார்க்கே 29

(வண்ணம்)

ஞான சம்பந்த மான நற்சொல்லை
நாளும் ஒப்பிக்க நலமேவும்
கானம் தாங்கும்ச மானம் ஒன்றின்றிக்
காணும் பண்ணிங்குக் கனிவாகத்
தான மென்(று)உய்ய வேணும் என்றெண்ணித்
தாரும் சண்பையர் சகமீதே
ஆன தொண்டெண்ணின் மோன உள்ளத்தில்
ஆகும் இன்பங்கள் அறிவீரே. 30

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

The temple is beautifully maintained and gives an inspiration. The priests and others are very kind and dutiful. My prayers, to the Lord, has healed a deadly disease and His Blessings are showered in plenty.

(Sd.) Sachidanandam.
20—10—66. Executive Engineer, P. W. D.
(G. A. C. Division, Tanjore)

சிறுபாணாற்றுப்படை அமைப்பும் அழகும்

திரு. மு. வை. அரவிந்தன் எம். ஓ எல்.,

பத்துப் பாட்டினுள், சிறுபாணாற்றுப்படை மூன்றாவதாக இடம் பெற்றுள்ளது. இது 269 அடிகள் கொண்ட ஆசிரியப் பாவால் ஆனது; வள்ளலிடம் பரிசில் பெற்று வரும் பாணன், பரிசில் பெற வள்ளலை நாடிச் செல்லும் பாணனை ஆற்றுப் படுத்தியதாக அமைந்துள்ளது. இசையில் வல்ல கலைஞர் முற்காலத்தில் பாணர் எனப்பட்டனர். பேரியாழை வாசித்தவர் பெரும் பாணர் என்றும், சீறியாழை வாசித்தவர் சிறு பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். சிறு பாணனை ஆற்றுப் படுத்தும் பாடல் சிறுபாணாற்றுப்படை என்று பெயர் பெற்றது. (சிறு பாண் : 35)

இப்பாடலை இயற்றிய புலவரின் இயற்பெயர் தத்தனார் என்பதாகும். கல்வி மேம்பாடு பற்றி நத்தத்தனார் என்ற பெயர் பின்னர் இவருக்கு வழங்கலாயிற்று. இப் பெயருடன் வேறு சில புலவர்கள் வாழ்ந்ததால், இவரை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்று ஊர்ப் பெயரையும் சேர்த்து வழங்கினர்.

சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக் கோடன் என்பவன். இவன் ஓவியர் குடியில் தோன்றியவன். ஓவியர் மகன் என்பது, ஓய்மான் என்று மருவியதால் ஓவியர் குடியினர் ஆண்ட நாடு ஓய்மான் நாடு எனப்பட்டது. ஓய்மான் பரம்பரையில் வில்லியாதன் என்ற வேறொரு மன்னன் இருந்தான் என்பது புறநானூற்றுப் பாடலால் (379) தெரிகின்றது.

சங்க காலத்தில் வாழ்ந்த பாரி, அதியமான், பேகன் முதலிய வள்ளல்கள் எழுவரும் இறந்தபின்னர்ச் சிறு பாணாற்றுப் படை இயற்றப்பட்டுள்ளது. எனவே இப்பாடல் தோன்றிய காலம் சங்க காலத்தின் இறுதிக்காலமாகிய கி. பி. 250 என்னலாம்.

பாட்டின் திறம்

திறமான பாட்டின் தொடக்கமே, கற்போர் நெஞ்சத்தைக் கவர்ந்து விடுகின்றது; அதனை அடுத்துவரும் ஒவ்வொரு பகுதி

யும், அடுத்தது என்ன என்று ஆவலோடு எதிர்பார்க்கச் செய்து நெஞ்சத்தை ஈர்த்துச் செல்லுகின்றது; முடிவு, இதற்குள் முடிந்து விட்டதே என்ற எண்ணத்தை உண்டாக்கிக் கற்போர் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கின்றது.

திறமான பாட்டிற்கு உரிய எல்லாப் பண்புகளும் சிறுபாணாற்றுப் படையில் உண்டு. அதில் இடம் பெற்றுள்ள பல் வேறு காட்சியும் கருத்தும் தெளிவாகத் தனித்தனியே அமைந்து, தொடர்புபட்டுச் செல்லுகின்றன. வெவ்வேறு நிறமுடைய மலர்களைக்கொண்டு அளந்து கட்டிய வண்ண மலர்மாலையைப்போல, அளவோடு அமைந்த காட்சிகள் அப்பாடலில் முறையாக இடம் பெறுகின்றன. சில காட்சிகள் மிகுதியானவை என்று விலக்குவதற்கோ, முன் பின்னாக மாற்றி அமைக்கக் கருதுவதற்கோ அதில் இடமில்லை.

மாநில மடந்தைக்கு மூங்கிலே தோள்; மலையே மார்பு. மலையில் பெருகிவரும் அருவி, அவள் மார்பின் மீது கிடந்து அசையும் முத்துமாலை போல தோன்றுகிறது – என்று தம் பாட்டை நத்தத்தனார் தொடங்குகின்றார். கற்பனை உலகத்தில், மிக உயர்ந்த இடத்தில் நின்றுகொண்டு, கவிஞருடன் சேர்ந்து நில மடந்தையின் தோற்றத்தை நாம் காண்கிறோம். நம் நெஞ்சம் விரிகின்றது. புதிய காட்சி தோன்றுகிறது. பாட்டின் தொடக்கமே நம் நெஞ்சத்தைக் கவர்கின்றது.

பின்னர்க் கவிஞர், பாலை நெடுவழியைக் காட்டி அதன் கொடுமையைப் புலப்படுத்துகின்றார்; பாலை நிலத்தில் மரா மரத்தின் வரி நிழலில் யாழ்ப் பாணர்கள் தங்கி இருப்பதைக் காட்டுகின்றார். கொடிய பாலை வழியில், வறுமையால் துன்புற்று வாடி இளைத்த பாணர்களைக் காட்டும் நுட்பம் எண்ணி மகிழத் தக்கது. பாணர்களின் நெஞ்சத்தில் மூண்டுள்ள துன்பத்தை மிகுதிப்படுத்திக் காட்ட, பாலை நிலத்தைப் பின்னணியாக அமைக்கின்றார் புலவர்.

அடுத்த பகுதியில், விறலியரின் அழகும் அவர்களைச் சூழ்ந்துள்ள சிறுவர்கள். விறலியரின் மெல்லிய அடிகளை நோய் தீரப் பிடித்துவிடும் காட்சியும், சீறியாழை வாசித்து மகிழ்வூட்டும் பாணனின் கலைத் திறனும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து மறைந்த மக்களை வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றது.

பரிசில் பெற்று மீளும் பாணர்கள், பாலை வழியில் முன்னர்க் குறிப்பிட்ட பாணர்களைச் சந்திக்கின்றனர். பரிசில் பெற்ற பாணரின் தலைவன், வருமையால் வாடும் பாணரிடம், "சேர நாட்டு வஞ்சி தரும் பரிசில் சிறியது; பாண்டியநாட்டு மதுரை தரும் பொருள் சிறியது; சோழநாட்டு உறந்தை வழங்கும் செல்வம் சிறியது" என்று கூறி அங்கெல்லாம் போக வேண்டாம் என்று குறிப்பாக உணர்த்துகின்றான். முடியுடை மன்னர் மூவர் தலை நகரங்களும் தரும் பரிசில்களைச் சிறியவையாக்கி, வளமான பரிசு நல்கும் நகர் எதுவோ என்று அறியும் வேட்கை நம் நெஞ்சத்தில் இயல்பாக எழுகின்றது.

அதன் பின் வரும் பகுதி, நம் உள்ளத்தில் எழுந்த வினாவிற்கு விடையாக அமையாமல் நம் ஆவலை மேலும் தூண்டுவதாகவே உள்ளது. பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி - ஆகிய ஏழு வள்ளல்களும் கொடுத்த கொடையை ஒருவனாகவே இருந்து கொடுக்கும் வள்ளல் - என்று அமைகின்றது அப்பகுதி. அந்த ஒரு வள்ளலையும் ஊரும் பேரும் கூறி எளிதாக அறிமுகப்படுத்தி விடவில்லை. அடுத்த பகுதியில் அவன் முன்னோர் இருந்து ஆண்ட ஊரின் வளன், அவனது தோற்றப் பொலிவு, குடிப்பெருமை, வீரம் கொடை ஆகிய யாவும் விளக்கப்பட்ட பின்னரே அவ்வள்ளலின் பெயர் நல்லியக் கோடன் என்று கூறப்படுகின்றது.

வள்ளலின் கொடைச் சிறப்பை மிகுதிப்படுத்திக் காட்டும் வகையில் அடுத்த பகுதி அமைகின்றது. நல்லியக்கோடனைக் காணுமுன் பாணர்களுக்கு இருந்த வறுமை, அவனைக் கண்ட பின் ஏற்பட்ட வளமை - ஆகிய இரண்டும் கற்போர் நெஞ்சத்தில் நன்கு பதியுமாறு அதில் கூறப்பட்டுள்ளன.

இவ்வளவும் கேட்டபின், பாணர்கள் அவ்வள்ளல் வாழும் நகரம் அங்குச் செல்வதற்கு உரிய வழி - ஆகியவற்றை அறிய விரும்புவது இயற்கையே. அத்தகைய விருப்பத்தைத் தூண்டிய பின்னரே, நல்லியக்கோடன் வாழும் கிடங்கிலுக்குச் செல்லும் வழியும், வழியில் உள்ள ஊர்களும், அங்குள்ள மக்களின் பண்பும் கூறப்படுகின்றன. பிறகு கிடங்கிலின் செழுமையும், மன்னனின் அரண்மனையும் பாட்டில் சிறப்பாக இடம் பெறுகின்றன. அரண்மனையின் உள்ளே அரியணையில் பெருமிதத்தோடு வீற்றிருக்கும் வள்ளலின் மாண்பும், அவனைச் சூழ்ந்திருக்கும் பல்வேறு மாந்தரின் இயல்பும், அவர்கள் கூறும் புகழ் மொழிகளும் கூறப்படுகின்றன.

நல்லியக் கோடனின் அவையில், பாணர்களின் கையில் உள்ள சீறியாழ் சிறப்போடு வெளியே தோன்றி, இன்னிசை எழுப்பும் என்ற கருத்தில், யாழின் தோற்றமும் அமைப்பும் பின் கூறப்படுகின்றன. யாழிசையோடு பாணர்கள் பாடவேண்டிய பாட்டின் பொருளும் தரப்படுகின்றது. யாழிசை கேட்டு மகிழும் வள்ளல் பாணர்க்கு நல்கும் உடையின் உயர்வும், உணவின் சிறப்பும் அடுத்த பகுதியில் இடம் பெறுகின்றன. வள்ளல் கொடுக்க இருக்கும் பரிசுப்பொருள் மிக அழகாகப் புனையப்படுகின்றது. பாட்டின் கருத்து இதோடு முடிகின்றது என்னலாம்.

இவ்வாறு முடிப்பதைப் புலவர் விரும்பாமல், நல்லியக் கோடனுக்கு உரிய மலையில் சூழ்ந்துள்ள வெண்முகிலிடையே மயில் தன் தோகையை விரித்து ஆடும் அழகைப்பாடி இனிது முடிக்கின்றார். பாட்டின் முடிவு நம் உள்ளத்தைக் கவர்ந்து என்றும் நீங்காத நினைவோடு பசுமையாய் பொலிகின்றது.

பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்; — *பாரதியார்.*

விசேஷ நாட்கள்

10—11—'66 முதல் 10—12—'66 முடிய

11—11—66 தீபாவளிப் பண்டிகை, மெய்கண்டதேவர் திருநக்ஷத்திரம்
12—11—66 அமாவாசை
13—11—66 பூசலார் நாயனார் திருநக்ஷத்திரம்
15—11—66 கடைமுகம், ஐயடிகள் காடவர்கோன் திருநக்ஷத்திரம்
16—11—66 முடவன் முழுக்கு
18—11—66 சூரஸம்ஹாரம், (ஸ்கந்தஷஷ்டி)
25—11—66 பிரதோஷம்
27—11—66 வேளூர்க்கிருத்திகை, சர்வாலயதீபம், கணம்புல்ல நாயனார் திருநக்ஷத்திரம்
6—12—66 மெய்ப்பொருள் நாயனார் திருநக்ஷத்திரம்
7—12—66 ஆனாய நாயனார்
9—12—66 பிரதோஷம்.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

(மலர் 25, இதழ் 11, பக்கம் 504 இன் தொடர்ச்சி)

திப்பிய பங்கே ருகமுக நோக்கந் திருச் செவிக
ணப்புந் திருநகை சீரடி வேண்டுவ னல்லற வோர்
துப்பிய மித்தை யுலகின்ப நச்சிலன் றொன்மறைகள்
செப்பிய நற்புக ழாய்தைய னாயகி செய்யருளே. 46

(இ-ள்) திப்பியம் பங்கேருகம் - உயர்ந்த (மேலான) தாமரை மலரை (ப்போன்ற மலராகிய) முகம் நோக்கம் திருச் செவிகள் - முகமும் கண்களும் அழகிய காதுகளும், நப்பும் திருநகை - விருப்பத்துடன் கூடிய அழகிய சிரிப்பும் சீரடி - அழகிய திருவடிகளும் (ஆயவற்றினையே) வேண்டுவன் - பிரார்த்தனை புரிகுவன். நல் அறவோர் - முற்றத்துறந்த முனிபுங்கவர்கள். துப்பிய மித்தை உலகு இன்பம் - உமிழ்ந்த (வெறுத்து ஒதுக்கிய) பொய்மையாகிய உலக இன்பத்தினை, நச்சிலன் - விரும்பிலன். தொல் மறைகள் செப்பிய நல் புகழாய் - மிகப் பழமையான வேதங்களால் பெரிதும் போற்றப்பட்ட நல்ல புகழினையுடையவளே! தையல்நாயகித் தாயே! அருளே செய் - தேவரீர் அடியேற்குத் திருவருளே விரைந்து செய்தருளுவீராக - எ - று (நம்பு - நப்புஎன வலித்தல் விகாரமாயிற்று.)

செய்யி லனந்திகழ் புள்ளூறை வேளூர்த் தெருவதனிற்
பொய்யி லணுமண லாகிக் கிடப்பினும் போதமிகு
மெய்யில குன்னடி யாரடி தோய்ந்தின்ப மேவுறுவேன்.
கையி லரியுடை யாய்தைய னாயக காரணியே" 47

(இ-ள்) செய்யில் அன்னம்திகழ் புள்ளூறை வேளூர் தெருவு அதனில் - வயலிடங்களிலுள்ள (கமலமலரில்) அன்னப் பறவைகளானவை தங்கித் திகழ்வுறும், புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன்கோயில் நகரிலுள்ள வீதிகளிடத்தில், பொய் இல் அணு மணல் ஆகி கிடப்பினும்-பொய்ம்மை இல்லாத அணுவாகிய மணலாகி(புழுதியாகி)க் கிடந்தாலும், போதம்மிகும் மெய் இலகு உன் அடியார் அடி தோய்ந்து - சிவஞானம் மிக்க மெய்ம்மையோடு விளங்குகின்ற தேவரீருடைய அன்பர்கள்

திருவடிகள் பட்டு, இன்பம் மேவுறுவேன் - பேரின்பத்தைப் பெற்றிடுவேன். கையில் அரி உடையாய் - திருக்கரத்தில் சங்கு சக்கர இரேகைகளையுடையவளே! தையல்நாயககாரணியே - தையல்நாயகமாகிய உலககாரணமாக விளங்குபவளே. (எ-று)

அணியாப் பவப்பிணி தீர்க்கும் வயித்திய ஞனிடத்தில்
மணியாந் தயிலம்வைத் தீந்திடு வானெனு மாண்பதனை
யெனியா னுணர்ந்தன னின்னரு ளா முரு வென்றெனையுங்
குணியா வுவந்தரு ளாய்தைய னுயகக் கோமளமே. 48

(இ - ள்) அணி ஆ (க) பவம் பிணி-வரிசையாக (திரளாக) வரும் பிறவி நோய்களை, தீர்க்கும் - ஒழித்தருளும், வைத்திய ஞர் - வைத்தியநாதப் பெருமானார், இடத்தில் - இடத்தின்கண், மணி ஆம் தயிலம் - மணியாகிய தைலத்தினை, வைத்து - அமைத்துக்கொண்டு, ஈந்திடுவான் என்னும் மாண்பு அதனை - கொடுத்தருள்புரிகுவன்என்கின்றமாட்சியாகிய அச்செயலினை, எண்ணி - நினைத்து, யான்உணர்ந்தனன் - அடியனேன், தெளிவுற்றேன். நின் அருளாம் உருவு என்று - தேவரீருடைய கருணையாகிய வடிவம் ஆகும் என்று, என்னையும் - அடியேனையும், குணி ஆ, உவந்து அருளாய் - ஒரு பொருளாகக் குறித்துக்கொண்டு மகிழ்ந்து அருள்புரிவாயாக. தையல்நாயகம் கோமளமே - அழகிய திருவுருவமாகிய தையல்நாயகி யம்மையே! (எ - று)

(கு - ரை) அணி - திரள், வரிசை, குணி- கருதல். (குணப் பொருள்) எண்ணி என்பது எணியெனவாயது. கோமளமே உவந்தருளாய் எனவினை முடிவு செய்க.

கோமள மேனிநற் பங்கேருகமுகங் கொஞ்சு சுக
மாமள வின்மொழி பாதச் சிலம்புட னன்ப னெதிர்
சாமளை யாந்தைய னுய்கி வந்தரு டண்பதம
தாமளை யென்மனச் சிக்கத் திருத்திவை சாற்றினனே. 49

(இ - ள்) கோமளம்மேனி - அழகிய திருவுடலையும், நல்பங்கேருகம் முகம் - நல்ல தாமரை மலர்போன்ற திருமுகத்தையும், கொஞ்சு, சுகம் ஆம் அளவு இன்மொழி - கொஞ்சிப் பேசும் கிளி மொழியாகிய அளவினையுடைய இனிய சொற்களையும் உடைய, சாமளை ஆம் தையல்நாயகி - பச்சை நிறமுடைய பார்வதியாகிய தையல் நாயகியே (தேவரீர்) பாதம் சிலம்புடன் அன்பன் எதிர் வந்தருள் - திருவடிகளில் அணிந்த வேதச் சிலம்புடன்கூட

அன்பனுகிய எளியேன்முன் எழுந்தருளியருள்புரிவீராக, தண் பதம் அது ஆம் அளை-குளிர்ச்சி பொருந்திய திருவடிகளாகின்ற குகையின்கண், என்மனம் சிக்க - அடியவன் மனமானது அங்குமிங்கும் அலையாதபடி அகப்பட்டுக்கொள்ள, திருத்திவை - திருத்தஞ்செய்து வைத்தருள்க. சாற்றினன் - விண்ணப்பித்துக் கொண்டேன். (எ - று). தண்பதமது - குளிர்ந்த திருவடிகளை, அளையாம் என்மனச் சிக்கத்து இருத்திவை - குகையாகிய என் மனக்காவற் கூடத்து எழுந்தருளச் செய்வீராக. என்றும் ஆம்.

(கு - ரை) கோமளம் - அழகு. பங்கேருகம் - சேற்றில் முளைப்பது. காரணவிடுகுறி. (தாமரைமலர்). சாமளம் - பச்சை, சுகம் - கிளி, சாற்றுதல் - விண்ணப்பித்தல்.

சாதியு முன்பினுந் தாயுநற் றந்தையுந் தானமுடன்
ஆதியு மந்தமு மில்லா வநாதி னுகமதைப்
பாதியுட் பாகம் பகிர்ந்துகொண் டாயிது பண்புறுமே
நீதியு டனெனைக் காப்பாய் தயிலம்மை நேசம்வைத்தே. 59

(இ - ள்) சாதியும் - வகையும், முன்னும் பின்னும் தாயும் நல் தந்தையும் - முற்காலத்தும் பிற்காலத்தும் நல்ல தாய்மார் களையும், பிதாமார்களையும், தானம் உடன் ஆதியும் அந்தமும் - இடத்துடன் முதலும் முடிவும், இல்லாத-அற்ற, அநாதி-பிரமதே வன்றன். ஆகமதை - திருவுடலினை, பாதி உள்பாகம் பகிர்ந்து கொண்டாய் - சமபாக உள்ளிடத்தையும் தனதாகப் பிரித்துக் கொண்டருளினுய், இது பண்புறும் ஏ - இஃது அறத்தன்மை யாகுமல்லவா, (அவ்வனமிருப்ப,) தயிலம்மை, தையல் நாயகி யாரே (பாலாம்பிகையே) நேசம் வைத்து - அன்பு கொண்டு, நீதியுடன் என்னைக் காப்பாய் - நேர்மையோடு அடியவனைப் பிறவிக்கடலில் வீழ்ந்து வருந்தாவாறு காத்தருளுவீராக. (எ-று).

(கு - ரை) அநாதி – ஆதியில்லாதவன். பகிர்தல் - கூறு பண்ணல். பண்பு - அறம். தையல் - இளமை (பாலாம்பிகை யென்னும் நாமம் குறிப்பது.)

ஓ

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

வெந்தயம்

வெந்தயம் ஓர் சிறந்த மூலிகை. வெந்தயத்திலும், வெந்தயக் கீரையிலும் காட்லீவர் எண்ணை (மீன் எண்ணை) யிலுள்ள "ஆல்காமிட்" என்னும் சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. மூளைத்தசையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை வளர்க்கக்கூடிய "பாஸ்பரஸ்" "நைட்டிரஜன்" சத்துக்களும் நிறைந்திருக்கின்றன. தசையை வளர்க்கக்கூடிய "லெசிதினும்" முட்டையிலுள்ள "நாக்ளியோ" "ஆல்பூமன்" நிறைய காணப்படுகிறது. இரத்தம் உண்டாவதற்கு ஓர் அரிய சத்தாகிய இரும்பு வெந்தயத்திலும், வெந்தயக் கீரையிலும் அதிகம் காணப்படுகின்றன. வெந்தயத்தை இரசாயனச் சோதனை செய்ததில் 6% கசப்பு எண்ணையும், 28% பியுசிலாஜ் பிசின்போன்ற பொருளும், 23% அல்பூமனும் மற்ற வைட்டமின் சத்துக்கள் 33% இருப்பதாகத் தெரிகிறது. 100 பலம் வெந்தயத்தை எரித்து அதன் சாம்பலைச் சோதனை செய்ததில் (8 பலம் சாம்பலில்) உடலை வளர்க்கும் பாஸ்பரஸ் $\frac{1}{4}$ பாகமும், எலும்பை வளர்க்கக்கூடிய கால்சியம் (Calcaum) என்னும் சுண்ணாம்பு சத்து $\frac{3}{4}$ பங்கும் இருப்பதாகத் தெரிகிறது.

வெந்தயம் குழந்தைகளுக்குக் காணப்படும் வயிற்றுக் கட்டிகளையும், மகோதரக் கட்டிகளையும் கரைக்கும். உடல் வீக்கம், சீதபேதி, விடாஇருமல், வயிற்றுவலி முதலியவைகளுக்கு மிகவும் கைகண்ட ஒளடதம். தீபனசக்தியை உண்டாக்கி உணவை ஜீரணிக்கச் செய்வதுமல்லாமல் மூளை நரம்புகளையும் பலப்படுத்துகிறது. மூத்திர அடைப்பை நீக்குகிறது.

வெந்தயத்தை வறுத்து ஒரு பலம் வறுத்த முழு கோதுமையையும் எடுத்துக் கொண்டு காபி பொடி செய்து காபிபோல் பால், சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். இந்தக் காபியைச் சாப்பிட்டு வந்தால் மூத்திர குண்டிக்காய்கள் நன்கு பலமடைந்து நீரிழிவு, மதுமேகம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும்.

வெந்தயத்தை அரைத்து ஆரோருட் மாவுடன் கஞ்சி செய்து சாப்பிட்டால் வயிற்றுப் போக்கையும், சீதபேதியையும் நிறுத்தும். பசுமோரிலும் கலந்து சாப்பிடலாம்.

அரிசிக் கஞ்சியுடன் சாப்பிட்டால் பெண்களுக்கு ஏற்படும் " லுக்கோரியா " என்னும் வெள்ளை விழுதலைக் குணமாக்கும், தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும்.

பிரஞ்சு டாக்டர் " ப்ளும் " என்பவர் தன் ஆராய்ச்சியில் கண்டவற்றை எழுதியுள்ளார். அதாவது " காட்லிவர் " எண்ணைக்குப் பதிலாக வெந்தயக் கீரையை உபயோகித்து வந்தால் (டையாபிடிஸ்) மதுமேகத்தால் ஏற்படக் கூடிய கால் மரமரப்பை (நூரைட்டீஸ்) போக்கும். யானைக்கால் போன்ற பாத நோய்களையும், கண்ட மாலை போன்ற தீராத மேக நோய்களையும், இரத்தம் குறைந்து காணப்படும் பாண்டு ரோகத்தையும், மூளை நரம்புகளின் பலஹீனத்தையும் போக்க வெந்தயத்தைத் தூள்செய்து கஞ்சியுடன் அல்லது பாலுடன் கால் பலம் கலந்து தினமும் உண்டு வந்தால் குணம் காணலாம்.

வெந்தயத்தை அரைத்துத் தேய்த்து தலை முழுகி வந்தால் தலைமுடி உதிர்தலைப் போக்கலாம், கூந்தல் கறுப்பாயும், பளபளப்பாயும் நன்றாக வளரும். வெந்தயத்தை மாவாக்கி வாசனைப் பவுடருடன் கலந்து முகத்தில் பூசிவந்தால் முகப் பருக்கள் மறைந்து தோல் வழவழப்பாகி தேஜசுடன் விளங்கும். வெந்தயத்தை நீரில் ஊறவைத்து தினமும் காலையில் நீராகாரத் துடன் உட்கொண்டு வந்தால் தேக காங்கை நீங்கி உடல் பருக்கும்.

வெந்தயக் கீரையைப் பொரித்த கறியாகச் செய்து உண்டு வந்தால், மலக்கட்டைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். இதில் வைட்டமின் A, B, C, சத்துக்களும், கால்சியம் சோடியம், முதலிய தேக வளர்ச்சிக்குரிய தாதுப் பொருட்களும் குளோரின் என்னும் மூலகமும் வெந்தயக்கீரையில் அதிகம் காணப்படுகிறது. தினந்தோறும் சாப்பிடலாம்.

மாதவிடாய் கிரமமாக ஆகாமலும் அதிக வலியை உண்டாகக்கூடிய "டிஸ்மோனேரியா" என்னும் வியாதியையும் கீழ்க் கண்ட முறைப்படி சாப்பிட்டு வந்தால் நிச்சயமாகக் குணம் காணலாம். 10 பலம் வெந்தயத்தை நன்றாக இடித்து 5 படி தண்ணீரில் கரைத்து $\frac{3}{4}$ படியாக சுண்டக் காய்ச்சி அத்துடன்

பனைவெல்லம் பலம் 12, சுக்கு பலம் ஒன்று. பச்சைஅரிசி மாவு பலம் நான்கு; உளுந்து மாவு பலம் 4, நெய் பலம் நான்கு; சேர்த்து இருதபதமாகச் செய்து காலை, மாலை 1 கரண்டி வீதம் சாப்பிடவும் பத்தியமில்லை.

இம்மாதம் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்ற நோயாளி களின் எண்ணிக்கை ;-

ஆண்கள்	... 1260
பெண்கள்	... 1009
குழந்தைகள்	... 796
ஆகமொத்தம்	... 3065

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Siddha Vaidya Sala, Vaithiswarankoil.

We came on a visit to the ancient temple of Vaithiswarankoil in connection with my daughter's health. I was very pleasantly introduced to Dr. K. Ramakrishnan. I was told about him and from the way he explained to us about my daughter's ailments, I was convinced of his gifts and requested him to check up all the members of my family, which he kindly did and prescribed according to each one's ailments. He has interest outside his profession in the various traditions of the land and makes an interesting personality worth meeting. He has also been helpfull to me in certain other problems too.

(Sd.) S. C. Jesudasan,
21—10—66 12, Kachcheri East Lane, Jaffna,
Ceylon.

I came to know of the Siddha Vaidyasalai at Vaithiswarankoil through a friend of mine, some time by the middle of this year. Eversince I have made a

number of visits to this institution to meet the physician Dr. K. Ramakrishan, in conneetion with the ailments of my daughter. As a medical practitioner myself, I was interested and took pains in observing the various activities of the institution. Dr. K. Ramakrishnan has a very rare quality of giving patient hearing, keen observation and an appropriate diagnosis resulting in marvelous cure of cases, which many eminent doctors, have failed to. He seems to possess a research mind and applies himself to the work most deligently and is therefore worthy of every encouragement. I wish him good health and longivity to serve the suffering humanity for many more years to come.

28—10—66 (Sd.) Dr. P. B. Cleetus,
Coimbatore-17.

நோயாளிகளின் கருத்து

எனது அண்ணார் சின்னதம்பிப்பிள்ளை ஒரு வருடமாகக் கை கால்கள் முடக்கப்பட்டு முடக்குவாதத்தால் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்கள். நான்கு மாதம் பாண்டிச்சேரி பெரிய ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சைப்பெற்றும் தீரவில்லை. மற்றும் திருவெண்ணைநல்லூர், திருக்கோவிலூர் ஆகிய ஊர் களிலும் வைத்தியம் செய்து பார்த்தும் தீராமல் வைத்தீஸ்வரன் கோவில் தருமபுர ஆதீனத்தில் வைத்தியம்செய்வதாய்க் கேள்விப் பட்டு வந்தோம். இங்குள்ள டாக்டர் ஸ்ரீ இராமகிருஷ்ணன் அவர்கள் எங்களை அன்புடன் பராமரித்துப் பதினைந்து நாட்களில் நன்றாக நடக்கும்படி செய்துவிட்டார். இம்மாதிரி இலவச மாக பல ஏழை மக்களுக்கு வைத்தியம்செய்து குணம் அடைந்து வருவதைப்பற்றி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கட்கும், டாக்டர் அவர்கட்கும் என்நன்றியையும் வணக்கத்தையும் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
N. கண்ணப்பன்
சின்னபாபுசமுத்திரம்
கண்டமங்கலம் P. O.
விழுப்புரம் தாலுக்கா

அப்பர் அருள்முரசு*

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

சிவசக்திக் காட்சி ;

1. காதலுடன் பெண் யானையைத் தழுவிக்கொண்டு ஆண் யானைகள் வரக்கண்டபோது சிவமும் சக்தியும் ஆகவே அவற்றைக் கண்டேன். ஆம்; திருவடி மலர்களையே அங்குக் கண்டேன் ; கண்டறியாத பெறும்பேறு பெற்றேன். கோழி பெடை, குயில் பேடை, சேவல் பேடை, மயில் பேடை, பகன்றில் பேடை, முதலியனவற்றைக் கண்டபோதும் அவ்வாறே. நாரை, பன்றி, கிளி, ஏறு, நாகு முதலியனவும் எனக்கு இவ்வனுபவத்தையே நினைவூட்டின ; கண்டறியாத பேரின்பச் சிவசக்திக் காட்சிகளே இவை. (21 - 31)

நரியும் பரியும் :

2. நரியைக் கூடக் குதிரை யாக்கி விடும் நலம் உடையவன் ஆரூரில் அமர்ந்த ஐயன் ;ஆம்; பக்குவமற்ற உயிர்களையும் பண்படுத்தும் திருவருளாளன் அவன். (33)

கனியும் காயும் :

யாராவது கனி யிருக்கக் காய் கவர்வார்களா ? இறையடி தொழாமல் உறிதூக்கித் திரிந்த என் வாழ்வும் அப்படித்தான் ஆயிற்று. (42)

முயலும் காக்கையும் :

3. முயலின் பின் போக எண்ணியவன் காக்கையைக் கண்டதும் அதைப் பின் தொடர்வானு? என்னைக் கருவிலிருந்து உருவாக்கிக் காத்துவரும் பெருமானை, வினைகளை யறுத்து என் உள்ளத்தைக் கோயில் ஆகக் கொண்ட ஐயனை, அன்பினை

* அப்பரடிகளின் தேவாரப் பாடல்களினின்றும் தொகுத்தெழுதப் பெற்றது.

மீண்டும் உண்டாக்கி அடிமைகொண்ட தலைவனை மறந்து எங்கோ சென்ற என் நிலையும் அப்படித்தான். (44)

நன்றும் தீதும் :

4. அறம் இருக்க விலைக்கு மறம் கொண்டதுபோலவும், இருட்டறையில் மலட்டுப் பசுவைக் கறந்து இளைத்ததுபோலவும் விளக்கிருக்க மின்மினியிடத்துத் தீக் காய்ந்தது போலவும், தவம் இருக்க அவம் செய்து தருக்கியது போலவும், கரும்பு இருக்க இரும்பு கடித்து இளைத்தது போலவும் ஆயிற்று என் வாழ்வு. (44, 47 to 51)

தண்ணீரால் பொம்மையா ?

5. குளிர்ந்த தண்ணீரால் பாவை செய்ய இயலுமா? இதையே என் அநுபவம் எனக்குக் காட்டிற்று. (45)

பிச்சை கிடைக்குமா ?

6. வளமான ஊரில்தான் பிச்சைக்காரர் வாழ்வெல்லாம், பாழாய்ப்போன ஊரில் பிச்சை எடுக்கப்போனால் என்ன கிடைக்கும்? அலைந்து திரிந்து இளைப்பதுதான் தொழிலாய் முடியும். இப்படியே என் நிலையும் ஆயிற்று. (40)

யாருக்கு அரியவன் ?

7. உள்ளதை மறைக்கின்ற வஞ்சகர்க்கு அரியவன் இறைவன்; எளிமையும் தூய்மையும் உடையராய் வெளிப்பட வாழ்வோருடன் கலந்து நிற்பான் அந்த வித்தகன். (62)

அருள்காரணத்தில் வருவான் !

8. சூரியன், சந்திரன், விண், மண், காற்று, தீ, நீர் அனைத்துந் தாமா இறையுருவம்? அல்ல; அல்ல; ஆயினும் உயிர்களிடம் வைத்த பேரருளால் அம்மை யொருபாகனை இறைவன் வருவான். (73)

தேடிக்கண்டுக்கொண்டேன் !

9. தேடினேன்; கண்டுகொண்டேன்; எங்கே? எப்படி? திருமாலும் பிரமனும் தேடக்கிடைக்காத கடவுளை, ஆம், என் உள்ளத்தில்தான் கண்டுகொண்டேன்! (95)

ஐந்தெழுத்து நலம்:

10. தாமரை, பூவிற் சிறந்தது; ஆனைந்து தரும் பசு அவ்வினத்திலேயே சிறந்தது; நடுவுநிலை பிறழாத வேந்தன், அரசரில் சிறந்தவன்; அவைபோன்றே இறைவன் திருப்பெயர் ஓதும் நாக்கு, நாக்குகளிலெல்லாம் சிறந்தது. **(105)**

ஐந்தெழுத்து ஆற்றல்:

11. விறகுக் கட்டை விண் அளவும் அடுக்கி வைக்கப் பட்டிருக்கிறது; இருப்பினும், ஒரு தீப்பொறி போதாதா,, அவற்றைச் சாம்பல் ஆக்க? பாவத்தின் பெருங்குவியலை அப்படித்தான் திருவைந்தெழுத்து அழித்து நீருக்கும். **(106)**

ஐந்தெழுத்துத் திறம்:

12. துன்பங்கள் வந்தபோதும், யாரையும் இரந்து நில்லோம்: மலைக்குக்கீழ்க் கிடந்தாலும் என்ன? நம் நடுக்க மெல்லாம் ஐந்தெழுத்தால் தீரும். **(107)**

ஐந்தெழுத்து இயல்:

13. உள்ளத்தில் இருளை ஓட்டும் ஒளி விளக்கே ஐந் தெழுத்து. **(111)**

ஐந்தெழுத்து நெறி:

14, அடைந்தவர்கட்கெலாம் நல்லநெறி காட்டுவது ஐந்தெழுத்து. **(112)**

தூது:

15. குயில்களே, கூறுங்கள், பழனம் என்ற தலத்தின் தலைவன், என் காதலன், என் புது எழிலை உண்டு சென்றானே, திரும்பி வாரானோ? என்னை இகழ்ந்துவிடுவானோ? கூறுங்கள். **(114)**

தில்லைக்கனி:

16. அவன் பற்று அற்றவர்கள் சேரும் இடம் ஆவான்; பாசூர் எனும் தலத்தில் நிலவும் பவளம்; தில்லைச் சிற்றம்பலத் தில் ஆடும் கனி; தீண்டற் கியலாத ஞான வடிவு உடையான்: **(145)**

அவன் அருள்எழில்:

17. கானப்பேரெயிலின் கரும்புக்கட்டி; கானூரில் முளைத்த கரும்பு; வாய்மூரில் வலம்புரிச்சங்கு; கயிலைக் களிறு. **(146)**

மெய்யும் பொய்யும் :

18. மெய்யானவர்க்கு மெய் ஆனவன் ; அல்லாத பொய்யர்க்கு அவனும் பொய் ஆனவன். (156)

அவன் கோயில் :

19, திருந்திய மனமே அவன் பொருந்தும் கோயில் ; மாறுபட்ட மனம் அவனை அடைய இயலாது. (158)

தீயும் சுடுமா ?

20. எங்கும் தீச் சூழ்ந்தாலும் எமக்கு ஒரு தீங்கும் வாராது; ஏன் ? தெத்தே என இனிது ஒலித்தபடி எமக்குள்ளே ஆடுகின்றான் இறைவன். அந்தப் பேரினிமைக்கு முன் தீயின் சூடு எம்மாத்திரம் ? (166)

சுமை அவனுடையது !

21. தனக்கு அன்பர் என்றால் போதும் ; சுமை அவனுடையது : நமக்குக் கவலை சிறிதும் கிடையாது, (157)

மனமே கோயில் :

22; காலையும் மாலையும் அவனைத் தொழுவார் மனமே அவனுக்கு ஆலயம். (173)

ஒளிப்பேறு :

23. யார் ஒளி பெற்றவர் ? அவனைத் தொழுவோர்க்கே ஒளி பெருகும். இருள்விலகும். (170)

வண்ணம் :

24, வானத்து மின்னல் அவன் செஞ்சடை நிறம் உடையது ; அவன் ஊர்தியாகிய ஆனேறே அவன் பூசியுள்ள திருநீற்றின் வண்ணம் ; பாற்கடலின் வண்ணம் : அவன் உலகின் வண்ணம் ; அவன் திருவடியே : செஞ்ஞாயிற்று வண்ணம். (174)

அருள் மன்னன் :

25. உலகங்களெல்லாம் உழன்றபோது நஞ்சை உண்ட நாயகன் அவன் ; எல்லா உலகங்கட்கும் மன்னன் அல்லனோ அவன் ! அதனாலேயே அருள்கொண்டு காத்து அருள் மன்னனாக விளங்குகிறான். (176)

(தொடரும்)

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை,
ஸ்ரீ தாயுமானேசுவர ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு
26—8—66 அன்று நூற்றுக்கால் மண்டபத்தில்



தருமையாதீனம் மௌனமடம் கட்டளையின் சார்பில், நடைபெற்ற திருமுறை மாநாட்டை திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில், சென்னை மாநிலக் கூட்டுறவு அமைச்சர் கனம், மன்றாடியார் அவர்கள் தொடங்கிவைத்தல்.

திருச்சி மலைக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவில் :

சென்னை மாநிலக் கூட்டுறவு அமைச்சர் கனம், மன்ருடியார் அவர்கட்கு யாகசாலையில் அருட்பிரசாதம் வழங்குதல்.

செய்திகள்

திருத்தருமையாதீனத்தில்
நவராத்திரி விழா

நவராத்திரி விழா பாத்ரபத சாரதா மாதத்து வளர்பிறை பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் கொண்டாடப் பெறும் தேவியின் விரதமாகும். இந்த விரதத்தை அனுஷ்டித்த எண்ணிறந்த தேவர்கள் விரும்பிய அனைத்தும் பெற்றுள்ளனர் எனச் சப்தசதி நூலால் அறியப்படுகிறது. முதல் மூன்று நாட்கள் மலைமகளாகவும், நடு மூன்று நாட்கள் மலர்மகளாகவும், இறுதி மூன்று நாட்கள் கலைமகளாகவும் தேவியை வழிபடுவது மரபு. இவ்வொன்பது நாட்களையும் கொண்டாடும் வகையில் பராபவ ஆண்டு புரட்டாசித்திங்கள் 29ஆம்நாள் (15—10—66) சனிக்கிழமை முதல் ஐப்பசித்திங்கள் 7ஆம்நாள் (23—10—66) ஞாயிற்றுக்கிழமை வரையிலுள்ள நாட்களில் பகலிலும் இரவிலும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் 16 ஆவது சதசண்டி யக்ஞமும், விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும், லக்ஷார்ச்சனையும் நிகழ்ந்தன.

14—10—66 வெள்ளிக்கிழமை கணபதிஹோமம், அனுக்ஞை முதலியனவும். 15-10-66 சனிக்கிழமை கடஸ்தாபனமும் செய்து, சதசண்டியக்ஞம் தொடங்கப்பெற்றது. நவராத்திரி நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் சதசண்டியக்ஞம், சுவாசிநீ குமாரி வடுபூஜை முதலியன நடைபெற்றன. 22—10—66 சனிக்கிழமை மகாபூர்ணாகுதியும், 23—10—66 ஞாயிற்றுக்கிழமை சப்தசதீ யக்ஞ கலசாபிஷேகமும் சிறப்புற நடைபெற்றன. நவராத்திரி நாட்களில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனையும், ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும், ஸ்ரீ அம்பாள் சந்நிதியில் வேதம், தேவீமாகாத்மியம், துர்க்கா சூக்தம், அபிராமி அந்தாதி, திருமுறைகள் முதலிய பாராயணங்களும் நடைபெற்றன.

நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து தரிசித்து அம்பிகையின்

அருளைப் பெற்றனர். 23—10—66 ஞாயிற்றுக்கிழமை சென்னை மாநில அறநிலையத்துறை, தஞ்சைத் துணை ஆணையர், திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும், திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்களும், திருச்சி டாக்டர், திரு. V. K. ரங்கநாதன் அவர்களும், ஸ்ரீரங்கம் நகரசபைத் தலைவர், திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்களும், மாயூரம் முதலிய இடங்களிலிருந்து பல அன்பர்களும் வந்து வழிபட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எல்லோருக்கும் அம்பிகையின் அருட் பிரசாதம் வழங்கி அருளினார்கள்.

தருமையாதீனக் கல்வி நிலையங்களின்
கலைமகள் விழா

நவராத்திரி விழாவில் ஆண்டுதோறும் நடைபெற்றுவருவது போல இவ்வாண்டும் ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. கலைமகள் விழாவில் நாள்தோறும் தேவீமாகாத்மியச் சொற்பொழிவுகள் முதலிடம் பெற்றன. ஆதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர், சிவாகம வித்துவான், சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார், சிவாகம பாடசாலை ஆசிரியர், சிரோமணி, பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள், தருமையாதீனம், சிரோமணி, சிவஸ்ரீ. சந்திரசேகரக் குருக்கள், தருமபுரம் சிவஸ்ரீ. முத்துசாமிக் குருக்கள். வேளூர் தேவஸ்தானம், சிரோமணி, சிவஸ்ரீ. பாலசுப்பிரமணியக் குருக்கள், சீகாழி தேவஸ்தானம், சிரோமணி, சிவஸ்ரீ. சோமசுந்தரக் குருக்கள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச் செம்மல். வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், கல்லூரிப் பேராசிரியர்களான சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன், தருமையாதீனப்புலவர், மகாவித்துவான், சித்தாந்தக் கலைமணி, திரு. சி. அருணைவடிவேல்முதலியார் ஆகியவர்கள் தேவீமாகாத்மியத்தின் அத்தியாயங்களைத் தலைப்புக்களாகக் கொண்டு சொற்பொழிவாற்றினர். பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை, வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் "காளிதாசன்" என்ற பொருள்பற்றிப் பேசினார்கள். கல்லூரி நிறைநிலை மாணவர்கள், G. பாலசுப்பிரமணியன், S. கணேசன், G. கலியபெருமாள், மணிவாசகம், G. பழநிச்சாமி, சி. பரஞ்சோதி, சி. அரங்கநாதன், T. சுந்தரவேல் காந்தி, S. திருஞானசம்பந்தம் ஆகியோர் முறையே சகலகலா வல்லி மாலை, கம்பர், குமரகுருபரர், கொற்றவை, அபிராம பட்டர், சரசுவதியந்தாதி, காளமேகம், பாரதியார், சிவாஜி என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

நாள்தோறும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி மாணவ மாணவியர்களால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. 13—10—66 ஞாயிற்றுக் கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் G. பழநிச்சாமி குழுவினர் (மந்திரம்பிள்ளை (பின் பாட்டு) சி. பரஞ்சோதி (கஞ்சிரா) மு. குப்புசாமி (கடம்)) "கண்ணப்பர் வரலாற்றை" விளக்கி வில்லுப் பாட்டாக நிகழ்த்தினர்.

ஆதீன தேவஸ்தானங்களில்

நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் நவராத்திரி விழா நாட்களில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் சிறந்த முறையில் அலங்காரங்களும் செய்யப்பெற்றன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து அம்பிகையின் அருளைப்பெற்றனர்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு, அம்பிகையின் அருளை எடுத்து விளக்கும் சொற்பொழிவுகள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் அமைக்கப் பட்டிருந்தன. சொற்பொழிவுகள் மாலை 6-மணி முதல் தொடங்கி நடைபெற்றன. சொற்பொழிவுகளை அன்பர்கள் பலர் வந்து கேட்டுமகிழ்ந்தனர்.

வேளூர் ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 15—10—66 சனிக்கிழமை முதல் 18—10—66 செவ்வாய்க்கிழமைவரை உள்ள நாட்களில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களான தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார். திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. சா. குருசாமி தேசிகர் (பொறுப்பு முதல்வர்). சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன். வித்துவான், திருமதி ப. நீலா (பேராசிரியை) ஆகியோர்களால் முறையே "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், தையல்நாயகி அந்தாதி, மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ். அபிராமி அந்தாதி" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 17—10—66 திங்கட்கிழமை முதல் 20—10—66 வியாழக்கிழமை வரையுள்ள நாட்களில்,

ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களால் "தையல்நாயகி அந்தாதி, காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருநிலை நாயகி அம்பாள் சந்நிதியில் 16—10—66 ஞாயிற்றுக்கிழமை முதல் 20—11—66 வியாழக்கிழமைவரை உள்ள நாட்களில் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களால், "மீனாக்ஷி யம்மை பிள்ளைத்தமிழ், அபிராமி அந்தாதி, காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களிலும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிர மணியப் பிள்ளை அவர்களால் "அன்னை அருள்" என்ற தலைப் பிலும் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன.

திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பகரே சுவர சுவாமி தேவஸ்தானத்தில் 19—10—66 புதன்கிழமை முதல் 21—10—66 வெள்ளிக்கிழமை வரையுள்ள நாட்களில் திருவை யாறு சமயப் பிரசாரகரும், செய்தியாளருமான, திரு. ஜி. தன வேல் பிள்ளை, ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர். திரு. சி. அருணைவடிவேல் முதலியார். பேராசிரியை, திருமதி ப, நிலா ஆகியோர்களால், "அன்னை அருள், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன.

திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி சமேத ஸ்ரீ அருண ஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 19—10—66 புதன்கிழமை முதல் 21—10—66 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திரு. ஜி. தனவேல் பிள்ளை, நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு வை. மு. சண்முக தேசிகர் ஆகியோர்களால், "பெரியநாயகி யம்மை விருத்தம். அம்மை அருள். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்" என்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன.

திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—10—66 வியாழக் கிழமை முதல் 22—10—66 சனிக்கிழமை முடிய உள்ள நாட் களில் நாகப்பட்டினம் திரு. வை. மு. சண்முக தேசிகர், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், சிதம்பரம் திரு. ச. சேது சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

மலைவளர் காதலி, அபிராமி அந்தாதி என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

பேரளம் ஸ்ரீ பவானி அம்பாள் சமேத ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் 18—10—66 செவ்வாய்க்கிழமையன்றும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 22—10—66 சனிக்கிழமையன்றும் வித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் முறையே அம்மை அருள், கொற்றவை நிலை என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார்கள்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திருவாரூர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களால் நவராத்திரிச் சிறப்பு என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை சமேத ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 21—10—66 வெள்ளிக்கிழமை சிதம்பரம் திரு. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்களால் நவராத்திரிச் சிறப்பு என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. ஆங்காங்கும் அன்பர்கள் வந்து அம்பிகையின் அருளை விளக்கும் சொற்பொழிவுகளைக் கேட்டு செவிபெற்ற பயனைப் பெற்றனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையச் சார்பில்

நவராத்திரி விழா

சென்னை தியாகராய நகரில் உள்ள தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 14—10—66 வெள்ளிக் கிழமை முதல் 22—10—66 சனிக்கிழமை முடிய நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. சென்னை சட்டமன்ற சபாநாயகர் கனம். S. செல்லபாண்டியன், திருமதி. சௌந்தரா கைலாசம், சென்னை மேல்சட்டமன்ற சபாநாயகர் கனம். M. A. மாணிக்க வேலர், திருமதி. T. N. அனந்தநாயகி M. L. A., சென்னை வானொலி நிலைய இசையமைப்பாளர் திரு. K. C. தியாகராசன், கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், சாரதா வித்யாலயா ஆசிரியைப் பயிற்சிப்பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. கோகிலா காளகஸ்தி, திரு. K. ஆறுமுக நாவலர், திருமதி. மீனாட்சி B. A., B. Sc., B. T. ஆகியோர் முறையே ஒவ்வொரு நாளும் தலைமை வகித்து அறவுரை கூறினார்கள். கனம். செல்லபாண்டியன் பேசுகையில் வீரம், செல்வம், அறிவு என்ற

மூன்றுக்கும் ஆதி தெய்வம் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்று பண்டைக்காலந் தொட்டுக் கொண்டாடி வருகின்றனர் நம் நாட்டினர். நமது தேசம் பெண்மையைப் பெருமைப்படுத்திய தோடு தெய்வமாகவே போற்றிவருகிறது. வீரம் என்பது குத்துச்சண்டையும், கொலேயுமல்ல. இவற்றைச் செய்பவன் கோழையாவான். தனக்குத் துன்பம் வந்துவிடுமென்று பயந்து தான் சண்டையும், கொலேயும் செய்ய முற்படுகிருன். இவன் தான் கோழை; இவன் வீரனுகமாட்டானென்று குறிப்பிட்டார் கள். திருமதி. சௌந்தரா கைலாசம் பேசுகையில், காயத்திரி, பஞ்சாக்ஷரம், ஜபம் ஒருநாள் செய்தால் போதாதா என்று நினைக்கின்றனர். உலகத்தில் சூரியன் தினம் தோன்றுகிருமே ஒருநாள் ஓய்வெடுப்போமென்று நினைத்தால் உலகம் என்ன வாகும் என்பதை யோசிக்கவேண்டும். தினம்தான் மூச்சுவிடு கிருமே ஒருநாள் அல்ல ஒருமணிநேரம் மூச்சுவிடாமல் இருப் போமென்ருல் நம் நிலே என்னவாகும் என்பதை யோசித்தால் தினம் ஜபம், தியானம் தேவை என்பது தானே தெளிவாகிவிடும் என்ருர்கள். கனம். மாணிக்கவேலர் பேசுகையில் பாலேவனத் திடையே நந்தவனம் இருப்பதுபோல், மாம்பலம் பகுதியில் தருமையாதீனப் பிரசார நிலேயம் அமைதியாக நல்ல சமயப் பணிகளே ஆற்றிவருகிறது என்ருர்கள். ஜெயின் கல்லூரி சம்ஸ் கிருத விரிவுரையாளர் திரு. S. இராமதாஸ் அய்யர் M. A., நாள் தோறும் தேவி பாகவதம் பற்றி அரிய விரிவுரை நிகழ்த்திஞர்கள். சத்தியவிசதன், சுதரிசனன், கிருஷ்ணபகவான், இராமபிரான் முதலியோர் தேவி உபாசனேயால் நலமடைந்ததையும், மகிஷா சுரன், விருத்திராசுரன், சண்டன், முண்டன் முதலிய அசுரர்கள் தேவியால் அழிக்கப்பட்டனர் என்பதையும் இவ் வரலாறுகளில் அடங்கிய தத்துவங்களேயும் விளக்கிஞர்கள்.

பிரதிதினமும் விழா தொடங்கும்போது தேவி வழிபாடு நடந்தபின்னர், தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் அபிராமி அந்தாதியை இசையோடு பாராயணம் செய்தார். தினந்தோறும் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை, நன்றியுரை நவின்ருர்கள். இந்திய அரசாங்கச் செய்தித்துறையின் சார்பில், ஒருநாள் பரஞ்சோதி குழுவினரின் இசையும், ஒருநாள் திரைப்படக் காட்சியும், சென்னே அரசாங்க செய்தித்துறையினர் சார்பில் ஒருநாள் திரைப்படக் காட்சியும் நடைபெற்றன. பேபி கிரிஜா குழுவினரின் கதை ஒருநாளும், திரு. S. A. நடேச அய்யர், திரு. நாகராச அய்யர், விகடமும், திரு. R. R. கோபால் & முருகானந்தம், விகடமும், திரு. K. C. தியாகராாசன் குழுவினர் இசையரங்கும், திரு. T. C. நீலகண்ட

அய்யர் விகடம் முதலியனவும் ஒவ்வொருநாளும் சிறப்பாக நடைபெற்றன. "நவராத்திரி விளக்கம்" என்ற துண்டுப் பிரசுரம் அன்பர்கட்கு வழங்கப்பட்டன.

திருமுறை வகுப்பு & சம்ஸ்கிருத வகுப்பு ஆண்டு விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 23—10—66 விஜயதசமி அன்று மாலை நிலையத்தில் நடைபெற்றுவரும் திருமுறை வகுப்பின் பதின்மூன்ருவது ஆண்டு நிறைவு விழாவும், சம்ஸ்கிருத வகுப்பின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும் சென்னைமாநில மாதர் நலக் குழுத் தலைவி திருமதி. சரோஜினி வரதப்பன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். சுவாமிகள் கூறுகையில், நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் திருமுறை வகுப்பில் படித்துப் பயன் அடைந்துள்ளனர் என்றும், நிகழாண்டில் 10 மாணவியரும், 4 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும், சம்ஸ்கிருத வகுப்பில் எட்டாண்டுகளாக 50 பேருக்குமேல் படித்துப் பயனடைந்துள்ளனர் என்றும், நிகழாண்டில் 12 மாணவர்களும், 7 மாணவியர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும், சம்ஸ்கிருத கலாசாலைக்காக 30 ஏக்கர் நில தானம் அளித்த குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. சரோஜினி வரதப்பன் இந்த விழாவிற்குத் தலைமை வகிப்பது பொருத்தமென்றும் குறிப்பிட்டார்கள். தலைவர் மாணவ மாணவியர்கட்குப் பரிசு வழங்கிப் பேசுகையில், தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டையும் இரு கண்களாகத் தருமபுர ஆதீனம் போற்றி வளர்த்துவருவது பாராட்டத்தக்கது என்றும், ஆதீனம் கோயில்களைச் சுத்தமாகப் பாதுகாப்பது போலவே சமயப் பிரசாரப் பணியையும் சுத்தமாகச் செய்துவருவது மகிழ்ச்சிக்குரியதாகும் என்றும், குழந்தைப் பருவத்திலேயே மொழி ஞானமும், பக்திச் சுவையும் குழந்தைகட்கு ஊட்டப்பெறுதல் அவசியம் என்றும் குறிப்பிட்டார்கள். திரு. N. R. முருகவேள் "தமிழ்ச்சொல்லும் வடசொல்லும்" என்பதுபற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். சென்னை மாநில செய்தித்துறையினர் "ஆதி சங்கரர்" திரைப் படக் காட்சி போட்டுக்காட்டினர். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவின்றார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்குவதன் ஏழாவதாண்டு நிறைவு விழா

சென்னை, தியாகராயநகர் தருமையாதீன மடாலயதேவாலய சமயப் பிரசார நிலையத்தில் ஏழாண்டுகளாக வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதங்கள் வழங்கிவருவதன் ஏழாவது ஆண்டு நிறைவு விழா, சென்னை அறநிலைய ஆட்சித் துறைத் துணை ஆணையர், திரு. A. சிதம்பரம் பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் 4—10—66 மாலையில் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் "நான் ஐந்தாண்டுகட்கு முன்னர் நண்பர் வீட்டுத் திருமண சம்பந்தமாகத் தஞ்சை ஜில்லாவிற்குச் சென்றபோது வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தேன். அப்பொழுது நான் அறநிலைய இலாகாவில் இல்லை. நிதி இலாகாவில் பணியாற்றி வந்தேன். நான் கோயிலுக்குப் போவதாக யாரிடமும் சொல்லி அனுப்பவும் இல்லை. திடீரென்று எதிர்பாராதவிதமாகத்தான் வைத்தீஸ்வரன்கோயிலுக்குச் சென்று தரிசித்தேன். ஆதீனத்தார் கோயிலை எப்படி வைத்திருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வைத்திருப்பதை அறிந்து பரவசமடைந்தேன். கால்வைப்பதற்குக்கூட கூசும்படியாக அவ்வளவு தூய்மையாக வைத்துள்ளார்கள். கோயிலுக்குள் நுழைந்தவுடன் நம்மைத் தெய்வ சக்தி கவர்ந்து இழுக்கிறது. இத்தகைய புனிதமான கோயில் பிரசாதம் ஏழாண்டுக்காலமாக சென்னை மக்களுக்கு ஆண்டு ஒன்றுக்குப் பன்னிரண்டுரூபாய் காணிக்கையில் நிலையத்தார் கிடைக்கச்செய்வது மிகவும் போற்றற்குரியது. தருமையாதீனம் சமயப் பிரசாரப் பணியை மிக நல்ல முறையில் திட்டமிட்டு நன்ருகச் செய்கிறது. பதினைந்து ஆண்டுகட்கு மேலாகவே பிரசாரத்திற்குப் பிரசாரகர்களை அமைத்தும், வாகனம் அமைத்தும் பிரசாரம் செய்வதோடு, தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் பிரசாரம் செய்வதற்காகவே ஒரு நிலையம் அமைத்துத் திட்டமிட்டு நிலையாகப் பிரசாரம்செய்வதை மிகமிகப் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்கள். தருமையாதீனப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் "வைத்தியநாதர்" என்பதுபற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். 3—10—66 இல் வேளூரில் நடைபெற்ற கிருத்திகை அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள் உறுப்பினர்கட்கும், அன்பர்கட்கும் வேளூர்த் தேவாரத் திருப்புகழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டன. வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்ருர்கள். தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

31—10—66 கிருத்திகையன்று வேளூரில் நிகழ்த்தப்பெற்ற கிருத்திகை அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள் 1—11—66 மாலை 7 மணிக்கு திரு. K. E. அருணாசல முதலியார் M. A., B. Com., அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி, உறுப்பினர்கட்கும், அன்பர்கட்கும் வழங்கப்பட்டன. தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத் தமிழ் பாடிப் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

மாதாந்தர வழிபாடு

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு, தியாகராய நகரில் உள்ள ஸ்ரீ அகஸ்தியர் ஆச்சிரமம் ஸ்ரீ சுந்தரவடிவாம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரவணிகேசுவரர் ஆலயத்தில் 23—10—66 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் குழுவினர் திருமுறை ஓதி வலம் வந்து முறையாக வழிபாடாற்றினர். பிறகு வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. திரு. K. R. R. சாஸ்திரிகள் தாம் வெளிநாட்டில் கண்ட சமயப் பண்பாடு பற்றி விரிவுரையாற்றினார்கள். திரு. N. R. முருகவேள் "அகத்தியர் தேவாரத் திரட்டு" என்பது பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினர்கள். தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் திருமுறை ஓதி மகிழ்வித்தார். ஆலய சிவாசாரியார் வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தார்.

திருவாமூரில்
புரட்டாசி மாதச் சதய விழா

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை ஸ்ரீ பசுபதீசுவரருக்கும், ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார், ஸ்ரீ திலகவதியாருக்கும் 27—9—66 செவ்வாய்க்கிழமை புரட்டாசி மாதச் சதய விழா பரதூர் மிராசுதார் திரு. K. M. இராஜசேகரம் பிள்ளை உபயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், மதியம் அடியார்கட்கு மாகேஸ்வரபூஜையும் நடைபெற்றன. ரெட்டியூர் முருகானந்தம் சகோதரர்கள் நாதசுரகானம் இசைத்தனர். மாலையில் உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலர் உழவாரப்பணி புரிந்தனர். அப்பர்

ஆலயத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர் உள்ளிட்ட பலரும் சிவபுராணம் ஓதி கூட்டு வழிபாடு நிகழ்த்தினர். திருவாவடுதுறை திரு. T. M. விசுவலிங்கம், திரு. சபாபதி சகோதரர்கள் "தேவார இசையரங்கு" நிகழ்த்தினர். அன்றுகாலை ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு உபயதார் பரதூர் திரு. K. M. இராஜசேகரம் பிள்ளை அவர்கள் காணிக்கையாக 1½ சவரனில் திருமாங்கல்யம் சமர்ப்பித்தார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "அப்பர் தேவாரம்" என்பது பற்றிப் பேசி அனைவருக்கும் வாழ்த்துக் கூறினார்கள்.

ஐப்பசி மாதச் சதய விழா

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் 24—10—66 சதயத்தன்று காலை திருவாமூர் கிராம முன்சிப் திரு கே. இராஜாராமம் ரெட்டியார் உபயத்தில ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனாருக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை ஸ்ரீ பசுபதீஸ்வரருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அடியார்கட்கு மாகேஸ்வரபூசையும் நடைபெற்றன. மாலை உள்ளூர் வெளியூர் அன்பர் பலர் உழவாரப்பணி புரிந்தனர். ஸ்ரீ அப்பர் ஆலய திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்களும், உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலரும் கூட்டு வழிபாடு நிகழ்த்தினர். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "அப்பர் தேவாரம்" பற்றிப் பேசி வழிபாட்டிலும், கோயில் வளர்ச்சியிலும் பங்கு கொண்டு வருபவர்கட்கு வாழ்த்துக் கூறினார்கள். பரதூர் மிராசுதார் திரு. கே. எம். இராஜசேகரம் பிள்ளை அவர்கள் ரூ. 400 - மதிப்புள்ள வைர மூக்குத்தி ஒன்றை ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு அணிவிக்க நன்கொடையாக அளித்தார்கள். திரு. வி. இராமமூர்த்தி ரெட்டியார் ரூ. 50 மதிப்புள்ள பித்தளைப் பாத்திரங்களை நன்கொடையாக வாங்கி வழங்கினார்கள். சிறுகிராமம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. தியாகராஜன் தேவாரச் சிறப்புப்பற்றி விரிவுரையாற்றினார்கள் அப்பர் ஆலய திருமுறை வகுப்பு மாணவ மாணவியர் தேவாரம் பாடிச் சிறப்பித்தனர்.

எதிர்காலம் - திரு. கே முத்துஜோதிடர்

பராபவஸு கார்த்திகைமீ 1உ முதல் 30உ முடிய

16—11—66 முதல் 15—12—66 முடிய

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாகும். சுக துக்கங்கள் சமனுறும். குடும்பத் தொல்லைகளால் மனக்லேசங்கள் ஜாஸ்தியாகும். நினைத்த காரியங்கள் ஆரம்பத்தில் தடைபட்டுப் பிறகு சாத்தியமாகும். வியாபாரிகளுக்குக் கொஞ்சம் நஷ்டத்தைக்காட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமேயாகும். உத்தியோகத்தில் இடம் மாறுதல் ஏற்படும. விவசாயிகள் ஓங்குவார்கள். தொழிலாளிகளுக்கு ரொம்பவும் நன்மையைத்தரும். பக்தர்கள் விசேஷ நன்மையை அடைவார்கள். ரக்ஷிக்கப்படுவார்கள். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் விசேஷமான நன்மைகளைப் பலவிதத்திலும் தந்து சுகம் அடையச்செய்யும். தீராத வினையெல்லாம் தீர்ந்துவிடும். திருவாதிரை நான்கு பாதங்களும் புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் சரீர ஆரோக்யக் குறைவாலும் குடும்பத் தொல்லைகளாலும் சதா கவலைப்பட நேரிடும். ஆனாலும் முடிவில் எல்லாம் நன்மையாகும். விவசாயம் ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் நலமேயாகும்; எதிர்பார்த்ததை விட விவசாய மூலமாகவும் வியாபார மூலமாகவும் லாபம்

கிடைக்கும். நூதன முறையான விவசாயம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். தொழிலாளிகளால் தொல்லைகள் அதிகமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஸ்திரீ மூலமாய் விசேஷ நன்மை உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். கையைவிட்டுப்போன ஜீவன லாபம் கைக்கு வந்துசேரும். மேற்படி மாதம் 10ம் தேதிக்குமேல் சில நூதன முறையான வியாபாரத்தாலும், விவசாயத்தாலும் லாபம் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் எதிர்பாராத ரொம்பவும் மேன்மை தரக்கூடிய சுபமான பலன்களையே உண்டுபண்ணும். நூதனமான முறையால் விவசாயம் ஓங்கும். அதனால் விசேஷ லாபம் உண்டாகும. ஈதிபாதைகள் எல்லாம் தானுக விலகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் ராஜயோகத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். எதிர்பாராதபடி தனதான்யங்கள் தானுக வந்துசேரும். உத்தியோகத்தில் உயர்பதவி உண்டாகும். சாது ஜனங்கள் துக்கமில்லாமலும் தாரித்ரியம் இல்லாமலும் சுகம் அடைவார்கள். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். மாதம் முற்பாதியில் வரவு செலவுகள் ஜாஸ்தியாகும். வைத்திய செலவு அடிக்கடி ஏற்படச்செய்யும்; விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் கொஞ்சம் நஷ்டம் உண்டுபண்ணும்; ஸ்திரீகள் புத்திராதிகளால் சுகம் அடைவார்கள். சேவகாவிருத்தியில் உள்ள உத்தியோகஸ்தர்கள் மேன்மை அடைவார்கள்; சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும்; புத்திராதிகளா லும் சிநேகிதர்களாலும் விசேஷ நன்மை உண்டுபண்ணும். விவசாயம் வியாபாரம் ஓங்கும். இராஜாங்கத்தால் நன்மை ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். ஆரோக் யத்தைத் தரும். இல்லறசுகம் ஓங்கும். ராஜாங்கத்தால் நல்ல சர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கச்செய்யும். நூதனமான ஆடை ஆபரணங்கள் தாளுக வந்து சேரும். தெய்வபலம் முன்னிற்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$. சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனை உண்டு பண்ணும். பந்து மித்திராதிகளாலும் சதா தொல்லையாகவே இருந்துகொண்டு இருக்கும், மனம் சாந்தி அடையாது. வரவு செலவுகள் சமனுகும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{2}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அலைச்சல்கள் அதிகமாகும். குடும்பத்தில் கவலைகள் உண்டு பண்ணிக்கொண்டே இருக்கும். ஆனாலும் உடனுக்குடன் தெய்வபலம் முன்னின்று காக்கும். தொழில் மதிப்பும் மேலோர் பெரியோர்களின் அன்பும் ஏற்படச் செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு:—மேற்படிமாதம் இயற்கைகள் எல்லாம் மாறி மாறி நடக்கும். சஸ்யாதிகளுக்கும், தான்யாதிகளுக்கும் புழு, பூச்சிகளா லும் இயற்கைக்கோளாறுகளாலும் கொஞ்சம் சிரமத்தை உண்டு பண்ணும். ஆனாலும் கண்டம் கண்டமாய், விட்டு விட்டு மழை கள் ஏற்பட்டு கோளாறுகளை மாற்றும். தர்மபூமியும் தர் மிஷ்டர்களும் காப்பாற்றப்படுவார்கள். மகாஜனங்கள் நாஸ்தி கத்தைவிட்டு சதா தெய்வ சிந்தனையாகவே இருந்துகொண்டு அவரவர்களின் கடமைகளைச் சரிவரசெய்துகொண்டுவர சகல பயமும் நீங்கி பூர்ண சுபிக்ஷம் உண்டாகும். தேசம் செழிக்கும் ராஜாங்கம் ஓங்கும்.

உ

திருக்கடவூர் மயானப் பெருமான் துதி

திரு. K. அரங்கசாமி

அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம்

உருவாய் அருவாய் உருவருவாய்
உலக முழுதுந் தானுகி
மருவார் சோலை சூழ்கடவூர்
மயானத் தமர்ந்த பெருமானே
கருவாய் பவனேன் றெனைவிடுதி
கண்டா யன்னை யபிராமி
திருவார் சோதி மணவாளா
சிவனே சுத்த சித்துருவே.

இடரே பட்டுத் திரிகின்றேன்
எனைநீ விடுதி யெம்மானே
கடவூ ரன்னை யபிராமி
கணவா கால காலாவேன்
மடமார் பிறவி நோய்தீர்க்க
வேண்டு கின்றே னல்லாமல்
தடமா ருலக வின்பங்கள்
தாவேன் றுனைநான் வேண்டேனே.

எண்சீர்க் கழிநெடிலடி விருத்தம்

கரவாடும் வன்னெஞ்சக் கள்வ னேனைக்
காத்தருள வேண்டுமையா கரவு நீக்கி
அரவாடும் பெருமானே அம்ப லத்தி
லாடுகின்ற அத்தாவுன் பொற்பா தத்தே
விரவாடச் செய்வாயோ விடுவாயோ அறியேன்
விண்ணவர்தம் பெருமான்நின் றிருவருளே யாகும்
உருவாடா வகையருளி அடியாரைக் காக்கும்
உண்மையனே பெரும்பற்றப் புலியூ ரானே.

திருமுறை வெளியீடுகள்

1. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை (ராப்பர்)	ரூ.	3—50
இரண்டாவது திருமுறை (காலிகோ)	ரூ.	5—00
மூன்ருவது திருமுறை (காலிகோ)	ரூ	5—75

2. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நான்காவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஐந்தாவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஆருவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஏழாவது திருமுறை (காலிகோ)	ரூ.	8—00

கிடைக்குமிடங்கள் :-

1. டிரஷரர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சை ஜில்லா.
2. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், சீகாழி, தஞ்சை ஜில்லா.
3. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம், (திருவிடைமருதூர்), தஞ்சை ஜில்லா.
4. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள், கும்பகோணம் வழி.
5. காஷியர், ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம், திருக்குவளை, நாகப்பட்டினம் தாலுகா.
6. காஷியர், ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர், தஞ்சை ஜில்லா.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலயம், 41. உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

குறிப்பு :- தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும் தபால் செலவு தனி.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-11-66.